
குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
ஜென்னும் வேதாத்திரியமும்...
பாகம்– 1
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# ஜென்னும் வேதாத்திரியமும்

## பாகம் 1


அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்


இதனுள்ளே


1. ஜென்னும் வேதாத்திரியமும்
2. புத்தத் தன்மையை முழுமையாக அடைய முடியவில்லையே?"
3. "தேடுகின்ற பொருள் என்ன? ஏன்?
4. அனைத்துக்கும் நாமே காரணம்
5. உனக்கு என்ன தெரிகிறது? (வந்ததுதான் போகுமே அல்லாது)
6. ஞானம் யாரிடம் பெறுவது?
7. பிறப்பு, இறப்பு என்பதன் அர்த்தம்!
8. வையமெல்லாம் வாழட்டும்
9. பழுக்கும் ஞானம்
10. உயிராசையும் இல்லை! பண ஆசையும் இல்லை!
11. விதி, சந்தர்ப்பம் மதி.
12. "பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு
13. எதிர்பார்த்தல் ஏமாற்றமே
14. நாளைக்காக கவலைப்படாதிருங்கள்
15. முயற்சி அளவே ஞானத்தின் விளைவு!
16. பயிற்சியும் முயற்சியும்
17. குருவின் மேன்மை
18. ஞானம் என்பது அறிந்து கொள்வது
19. வீடுபேறு எப்போது எய்தலாம்?
20. மனம் என்பது பெருங்கடல்
21. மன ஒருமையும் சந்தோஷமும்
22. அகத்தவமும் அற வாழ்வாகும்
23. சிந்தை அடங்கிடும் சீவனே சிவனாகும்
24. அறிவாளி யார்?

25. மனிதனுக்குப் பிறப்புத் தொடர்
26. ஞானம் தேடும் பக்தர்கள்
27. வழியும் கோப்பை
28. போரை நிறுத்திய புத்தர்
29. தெளிவு குருவார்த்தைக் கேட்டல்
30. பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகிவிடும்
31. சுய அறிவால் உனையறியும் சாவி எது?
32. இயற்கை என்ற போரட்டக்காரன்
33 .கர்மயோகமா? தியானமா?
34. புலன்கடந்த செயல்முடிவே
35. ஞானத்தை தேடி
36. உளமார்ந்த மன்னிப்பு
37. செயலுக்கு விளைவு உண்டு?
38. பிறந்தவர்கள் அனைவருமே இறப்பார்
39. எதற்கும் கவலை வேண்டாம்
40 .ஞானத்தின் நிலைகள்
41. எண்ணத்தின் சிறப்பு
42. முழு விழிப்புணர்ச்சி!
43. நீ நான் இல்லையே!
44. மனம் ஒரு பொக்கிஷம்
45. நிகழ் காலத்தில் வாழ வேண்டுமென்றால்
46. நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
47. மௌனம் எனும் ஞானவரம்பு
48. கருதவமே போதும்
49. சொர்க்கமா? நரகமா?
50. சித்தம் என்னும் பெருநிதி

# 1. ஞானம் தரும் ஜென்னும் வேதாத்திரியமும்

செயலில் முழு விழிப்புணர்வு தான் ஜென்னும் வேதாத்திரியமும்

அது தானாகவே திகழ்கிறது.

ஒவ்வொர் உயிரிலும் உண்மையான ஜென்னும் வேதாத்திரியமும் பிரதிபலிக்கிறது. அவை நம்மை நம் உண்மை இயல்பிற்கு எடுத்துச் செல்கிறது. உடனே மனம் விடுதலை பெறுகிறது.

சொல்லித் தெரிவதில்லை ஜென்னும் வேதாத்திரியமும்.

சொல்லப்படுவதல்ல ஜென்னும் வேதாத்திரியமும்.

ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஜென்னின் வேதாத்திரியத்தின் நோக்கமாகும்.

"உன் மனதை உற்றுப் பார்த்தால்அங்கு இறை நிலையைக் காண்பாய்" என்பதே ஜென்னின் வேதாத்திரியத்தின் சாரம்.



ஒரு குறுநில மன்னர் ஒரு ஜென் ஆசிரியருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது மன்னர் கேட்டார். இறந்த பின்னர் நாம் கற்ற ஜென் முதலான அருள் கல்விகள் பயனுக்கு வருமல்லவா? என்று.

ஆசிரியர் சொன்னார், நான் இதுவரை செத்ததில்லையே,

ஏட்டுக்கல்வியின் ஆதாரத்தில் கற்று, உணர்ந்து அறியாமல், பிறருக்கு விளக்கம் அளிப்பது சரியல்ல.

இங்கு நாம் காண்பது ஒரு சிறந்த ஜென் ஆசிரியரை மட்டுமல்லாமல் ஒரே நேர்மையானவரையும் கூட.

"ஏடுகளின் மூலம் எழும் ஞான ஆர்வம் பற்றி வேதாத்திரியம் சொல்கிறது!

“ஏட்டினிலே கதைத்துவிட்ட ஞானம் கற்று,
ஏக்கமுற்று, இதையடைய எண்ணம் கொண்டு,
போட்ட இடந்தனிற்பொருளைத் தேடிக் காணும்
பொது அறிவைக் கூட உபயோ கிக்காமல்,
நாட்டிலுள்ள அனுபோகப் பொருட்கள்மீது
நாடிநிற்கும் அறிவைப் பண்படுத்த வேண்டி,
காட்டிற்குப் போய்க் கிழங்கும் கனியும் உண்டு.
காலத்தைக் கழிப்பதனால் பயன்தான் என்ன?”
(ஞாக.பா.1439)

வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 2.புத்தத் தன்மையை முழுமையாக அடைய முடியவில்லையே?”

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

சீஜோ என்ற ஜென் குருவிடம் ஒரு துறவி. “நம்முடைய எழுதப்பட்ட வரலாற்றுக்கு முன்பு உள்ள ஒரு புத்தர், தியானத்தில் அமர்ந்து பத்துப் பிறவிகள் எடுத்தும், அந்த மேலான உண்மை நிலையில் விளக்கம் பெறவில்லை என்று நான் கேள்விப்பட்டேன்.

ஆகவே, அவரால் ஒரு முழுமையான புத்தராக முடியவில்லை. ஏன் அப்படி? என்று கேள்வி கேட்டார்.

அதற்கு சீஜோ, “உன்னுடைய கேள்வியிலேயே விளக்கம் இருக்கிறது”

துறவி, “அவர் தியானம் செய்து கொண்டிருந்தாலும், ஏன் அவரால் புத்தத் தன்மையை முழுமையாக அடைய முடியவில்லை?”



சீஜோ, “ஏன் என்றால், அவர் ஒரு புத்தராக இல்லை” என்றார். தியானம் செய்பவர்கள் மனதை வெறுமையாக்கிக் கொண்டு வரும் போதே, ஒரு கட்டத்தில் தியானத்தையே விட்டுவிட்டு, உடலாலும், மனதாலும் முழு ஓய்வில் இருக்க வேண்டும்.

ஜெ.கிருஷ்ணமூர்த்தி “தியானம் தேவையே இல்லை” என்கிறார். அது தியானத்தில் ஆழ்ந்து சென்றவர்களுக்குத்தான் பொருந்தும்.

ஓர்மை நிலைப் பயிற்சி வேண்டும் என்கிறார் வேதாத்திரி மகரிஷி. மனமற்ற நிலையில் இருக்க வேண்டும். தியானம் தனாகவே அமையும்.

வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

“நினைப்பும் மறப்பும் அற்று இருக்க நீ பழகிக்கொள். புலன்கள்
அனைத்தும் அடிமையாம், அமைதி கிட்டடிடும் ஆங்கே.
ஒன்றையும் நினையாது, உன்னையும் மறவாது,
நின்ற நிலையே அது. நீயறி நினைவை நிறுத்தி” (ஞாக.1486)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 3.தேடுகின்ற பொருள் என்ன?
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

சீனாவில் புகழ் பெற்ற ஞானி ஒருவர் இருந்தார்.

ஞானம் பெற விரும்பிய இளைஞன் ஒருவன் அவரிடம் வந்தான்.



அவரைப் பணிவாக வணங்கிய அவன் “ஞானம் என்ற நன்மருந்து உங்களிடம் இருப்பதாக அறிந்தேன். அந்த மருத்தைத் தந்தால் நானும் ஞானம் பெறுவேன்” என்றான்.

அவனை மேலும் கீழும் பார்த்த அவர் “நீ ஞானத்தை விலைக்குக் கேட்கிறாயா? இனாமாகக் கேட்கிறாயா?

விலைக்குக் கேட்பதாக வைத்துக் கொண்டால் என்னால் ஞானத்தை விற்க முடியாது. ஏனென்றால் அதற்கான விலையை உன்னால் தர முடியாது.

இனாமாக உனக்கு ஞானத்தைத் தர மாட்டேன்.

இனாமாகக் கிடைக்கும் ஞானத்தை நீ மதிக்க மாட்டாய்.

உனக்கு சொல்லும் அறிவுரை இதுதான்.

நீயே முயன்று கல்வி என்னும் கடலுள் மூழ்கி எப்படியாவது ஞான முத்துகளை எடுக்க வேண்டும். வேறு வழி இல்லை” என்றார்.

ஞானம் தேடும் பக்தர்களுக்கு என்ன சொல்கிறது வேதாத்திரியம்?

தேடுகின்ற பொருள் என்ன? ஏன்? நமக்குத்
    தெரிந்தவர் யார்? கிடைக்கமிடம் எது? ஈதெல்லாம்
நாடுகின்ற வழக்கம் சிலபேரே கொள்வார்.
    ஞானமதைத் தேடும் சிலர், இதை மறந்து
ஓடுகின்றார். உருக்கமுடன் தேடுகின்றார்.
    ஒடுங்கிநின்று அறியும் இதை விரிந்து காணார்!
வாடுகின்றார். உளம்நொந்து, இருளைத்தேட
    விளக்கெடுத்துப் போவதைப்போல, முரண் பாடன்றோ?
(ஞாக.பா.1438)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.வாழ்க வளமுடன்.

## 4. அனைத்துக்கும் நாமே காரணம்

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

அந்த கால ஜப்பானில் ஒரு துறவி

அவர் எங்கே சென்றாலும் கையில் ஒரு சிறு கண்ணாடியை எடுத்துப்போவார்

இதைப் பார்த்த அவரது சிஷ்யர்கள் தங்களுக்குள் பேசிச் சிரித்துக்கொண்டார்கள்

‘நம்ம குருநாதருக்குத் தான் பெரிய அழகுன்னு நெனப்புடா

எப்பப் பார் கண்ணாடியில் தன் மூஞ்சைத் தானே பார்த்து ரசிச்சுகிட்டு இருக்கார்

சிஷ்யர்கள் இப்படி பேசுவது குருநாதருக்கும் தெரியும்

ஆனால்

அவர் தன் பழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை

ஒருநாள், அந்த ஜென் துறவியைப் பார்க்க ஓர் அரசன் வந்திருந்தான்


அவன் ஆசிரமத்தினுள் நுழைந்தபோது

துறவி வழக்கம்போல் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருந்தார்

இதைக் கவனித்த அரசனுக்கு ஆச்சரியம்.

'ஐயா, நீங்கள் எல்லாவற்றையும் துறந்த முனிவர்

ஆனால் இப்படி அடிக்கடி கண்ணாடியில் முகம் பார்க்கும் ஆசையை மட்டும் தவிர்க்கமுடியவில்லையா? என்று நேரடியாகவே கேட்டுவிட்டான்.



துறவி சிரித்தார்

'அரசனே, எனக்கு ஏதாவது பிரச்னை வந்தால்

அந்தப் பிரச்னைக்கு யார் காரணம் என்று தெரிந்துகொள்ள

இந்தக் கண்ணாடியைப் பார்ப்பேன்

அங்கே தோன்றும் உருவம்தான் என்னுடைய தலைவலிக்கு முழுமுதல் காரணம் என்று புரிந்துகொள்வேன்!'

'அப்புறம், அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டாமா...???

அதைச் செய்வதற்குப் பொருத்தமான நபர் யார் என்று தேடுவேன்

மறுபடியும் கண்ணாடியைப் பார்ப்பேன்

அங்கே தோன்றும் உருவம்தான் இந்தத் தலைவலியைத் தீர்க்கக்கூடிய மருந்து என்று புரிந்துகொள்வேன்.'

'எப்போதும் இந்தக் கண்ணாடி என்னிடம் இருப்பதால் என்னுடைய நல்லது, கெட்டதுகளுக்கு யார் காரணம் என்கிற உணர்வை நான் மறப்பதில்லை

நீ எப்படி...???'

செயலுக்குத் தக்க விளைவே இறைநீதி. நமக்கு வருபவை எல்லாம் நமது செயலின் விளைவே என்கிறது வேதாத்திரியம்.

இறைநிலையில் எல்லாமே இருப்பு உள்ளதெனினும்,
எவரும் அதில் யாதொன்றும் எடுத்துக் கொள்ள முடியா.
மறைபொருளாய் இவையனைத்தும் அலை நிலையில் உளன.
மனிதன் செயல் எண்ணங்கள் தரம் தன்மைக்கொப்ப,
முறையாக உருவெடுத்து. முனைந்து உந்தி உந்தி.
முனவந்து உரியவர்க்கு சேர்க்கும் இறைநீதி,
கறையுடைய பேராசை அளிப்பதுதான் என்ன?
களங்கம், உடல் மனத்துன்பம். காலவரை இல்லை." (ஞாக.1809)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 5.உனக்கு என்ன தெரிகிறது?

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

சீனாவின் மிகப் பெரிய தத்துவ ஞானியான லாவோட்சு சிறு வயதாக இருந்த போது நடந்த நிகழ்ச்சி.

அவரது குருவும் நோய்வாய் பட்டு படுக்கையில் இருந்தார். அவர் மிகவும் வயது முதிர்ந்தவராகவும் இருந்தார்.

லவொட்சு தன் குருநாதரை இறுதியாகச் சென்று பார்த்தார். "குருவே! தாங்கள் எனக்கு இறுதியாகச் சொல்லும் போதனை என்ன?" என்று கேட்டார்.



உடனே குரு தன் வாயை திறந்து காண்பித்தார். பிறகு,

“உனக்கு என்ன தெரிகிறது?” என்று கேட்டார்.

லவோட்சு தன் குருவிடம்,

“நாக்கு இருக்கிறது. பற்கள் இல்லை” என்றார்.

உடனே குரு சொன்னார்.

“உலகைப் பற்றிய எல்லா ஞானமும் உனக்கு உள்ளது. உனக்கு எந்தப் போதனையையும் நான் சொல்லத் தேவையில்லை” என்றார்.

“இடையில் வந்த பற்கள் விழுந்து விட்டன. பிறக்கும் போதே இருந்த நாக்கு அப்படியே உள்ளது” என்ற தத்துவத்தைத்தான் குரு அவருக்கு உணர்த்தினார்.

## வேதாத்திரியம் சொல்கிறது....


“வந்ததுதான் போகுமே அல்லாது
வருமுன் இருந்த ஒன்று போவதுண்டோ?
இந்த உண்மை எண்ணி எண்ணி உணர்ந்து கொண்டால்
எவருக்கும் எப்போதும் நஷ்டமேது?” (ஞாக.பா.88)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6.ஞானம் யாரிடம் பெறுவது?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஞானதாகம், ஒரு பிரபுவுக்கு உண்டானது.



அதற்கான தெளிவைப் பெறவேண்டி...அவர் பலதரப்பட்ட மதங்கள், சடங்குகள், தத்துவங்கள் முதலானவற்றை அலசி ஆராய்ந்தார்.

உருவ வழிபாடு, அருவ வழிபாடு, வேள்வி, யாகம், என அனைத்தையும் புரிந்துகொள்ள அவற்றில் பல வழிகள் கூறப்பட்டிருந்தன.

ஜென் தத்துவம் பற்றியும் எதிலும் சரியான வகையில் விளக்கப்பட்டிருக்கவில்லை.அதனால்– ஜென் குரு ஒருவரை நாடி விளக்கம் பெறவேண்டும் என்று அந்த பிரபு முடிவு செய்தார்.

பலரிடம் தீர விசாரித்த பிறகு, இவரே தனக்கு விளக்கம் கூறத் தகுதியுடைவர் என்று எண்ணி ஜென் குரு ஒருவரிடம் சென்றார்.

பிரபு அந்த ஜென் குருவைப் பணிந்து வணங்கி, “குருவே” எனக்கு ஜென் தத்துவம் புரியவில்லை. அதற்கான விளக்கத்தை அறிந்திட ஆவல் கொண்டவனாய் உள்ளேன். அதனால் தாங்கள் ஜென் தத்துவம் பற்றி விளக்கமாக எனக்கு உரைத்தருள வேண்டும்.” என்று வேண்டினார்.

குரு தன்னிடம் விளக்கம் பெற வந்த பிரபுவிடம், “ஜென் தத்துவம் என்ன கூறுகிறது தெரியுமா?” என்று தொடங்கியவர்...

சற்று பொறு. போய் சிறுநீர் கழித்துவிட்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டு உட்புறம் சென்று விட்டார்.

பிரபுவுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

“என்ன இது? இந்த குருவைப்பற்றி எவ்வளவு பிரமாதமாகக் கேள்விப் பட்டோம்.? இவரிடமிருந்து எவ்வளவு பெரிய விளக்கத்தை எதிர்பார்த்தோம். இவர் கிராமப்புறத்து விவசாயியைப் போன்று சர்வ சாதரணமாகச் சிறுநீர் கழித்துவிட்டு வருவதாக சொல்லி விட்டுச் சென்று விட்டாரே!” என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாலும் அதனை வெளிக்காட்டாது குருவுக்காகக் காத்திருந்தார்.

சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்த குரு “புரிந்ததா?” என்பது போல் தலையை அசைத்துப் பிரபுவிடம் வினவினார்.

பிரபு, ஒன்றும் தெரியாமல் விழித்தார்.

அப்போது “எவனாக இருந்தாலும் நான் உட்பட, சிறுநீர் கழிக்காமல் இருக்க முடியுமா? அதைச் செய்துதானே தீர வேண்டும்? அதையும் நான்தானே கழித்தாக வேண்டும்.” எனக்குப் பதிலாக அதற்கு உன்னை, என்னால் அனுப்ப முடியுமா?” என்று கேட்டார்.

குரு கூறியதைக் கேட்டதுமே அந்த பிரபுவுக்கு ஞானம் பிறந்தது.

“அவரவர் வாழ்வு என்பது அவரவர் கையில் தான் உள்ளது. அதனை எக்காரணம் கொண்டும் எவரிடமும் தள்ளி விடவும் முடியாது” என்னும் உண்மையைப் பிரபு உணர்ந்து கொண்டார்.

ஐந்துபுலன்ககள் மூலம் உயிரின் ஆற்றல்
அழிவதையே இன்பமென உணர் மயக்கம்
சிந்தனையில் உயருங்கால் சீவ காந்தம்
சிதறுவதே ஐயுணர் வென்றறிந்த கொண்டோம்.
உந்த உந்தக் குண்டலினி புருவ மையத்
தூறிவரும் பேரறிவின் ஆற்றல் பெற்று
சொந்தத்தனி முயற்சியினால் வாழ் வாராய்ந்து
சொல்நினைவு செயல்மூன்றை ஒழுங்கு செய்வோம்." (ஞாக.1396)

சொந்தத் தனி முயற்சியினால் வாழ்வாராய்ந்து அறிவு தெளிய வேண்டும். ஞானம் பெற வேண்டும் என்கிறார் வேதாத்திரியார்

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 7.பிறப்பு, இறப்பு என்பதன் அர்த்தம்!
## (ஜென்னும் வேதாத்திரியமும்)


ஒரு சமயம் ஜென் ஆசிரியர் டோகோ- தன்னுடைய சீடருடன்- மடத்திற்கு அருகில் உயிர் நீத்த ஒருவருடைய குடும்பத்திற்கு ஆறுதல் கூறச் சென்றார்.

சவப்பெட்டியை தட்டியவாறே சீடன் "உயிரா, பிணமா?" என்று ஆசிரியரைப் பார்த்துக் கேட்டான்.

ஆசிரியர். "உயிர் என்றும் சொல்லமாட்டேன். பிணம் என்றும் சொல்ல மாட்டேன்"

சீடன். "எதனால் சொல்ல மாட்டீர்கள்?"

ஆசிரியர். என்னால் சொல்ல முடியாது, என்னால் சொல்ல முடியாது”



மடத்திற்கு திரும்பி வந்து கொண்டு இருந்தபோது,

சீடன், “ஆசிரியரே, நீங்கள் பதில் சொல்லவில்லை என்றால், உங்களை நான் உதைக்கப் போகிறேன்.”

ஆசிரியர். “நீ விரும்பினால் என்னை அடித்தாலும் அடித்துக் கொள். ஆனால், என்னால் பதில் கூற முடியாது.”

சீடன் ஆசிரியருக்கு ஒரு அடி கொடுத்தான்.

கொஞ்ச வருடங்களுக்குப் பின்பு டோகோ இறந்தார். சிசோ, டோகோவிற்கு அடுத்த படியாக, மடத்தில் ஜென் ஆசிரியராக பதவி ஏற்றார். சீடன் சிசோவிடம் சென்று நடந்த அனைத்தையும் கூறினான்.

சிசோ. “என்னாலும் உயிர் என்றும் சொல்ல முடியாது. பிணம் என்றும் சொல்ல முடியாது” என்றார்.

இதைக் கேட்ட சீடனுக்கு- தன்னொளி பெற்று –தூக்கத்தில் இருந்து எழுந்தவன் போல- பிறப்பு, இறப்பு என்பதன் அர்த்தம் புரிந்து கொண்டான்.

இந்த நிலையாமை- தத்துவத்தை வேதாத்திரியார் மாக்கோலமாய் விளைந்த மதிவிருத்தில் சுருக்கமாகச் சொல்கிறார்,

"பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு இதை
மறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை." (மாக்.பக்.16)

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" என்பது வள்ளுவம்.

## பிறப்பும் இறப்பும் உருவ தோற்றமான உடலுக்கே – வேதாத்திரியம்

- பிறப்பும் இறப்பும் உருவ தோற்றமான உடலுக்கே அன்றி, அரூபமாக இருக்கும் இயங்கும் உயிருக்கு அல்ல.
- அணுக்களின் எழுச்சி, கவர்ச்சி என்ற இயக்கத்தால் ஏற்படும் அவைகளின் கூடுதல், பிரிதல் என்ற நிகழ்ச்சிகளே எல்லா உருவங்களின் தோற்ற, மறைவு சம்பவங்களாகும்.
- தொடர்ந்து நடைபெற்று வரும் அணுக்களின் கூட்டு இயக்கத் தன்மாற்றச் சிறப்புகளின் அவ்வப்போதைய நிலைகளைக் காட்டுவதே பொருட்கள், ஜீவராசிகள் இவைகளின் உருவ அமைப்புகளும் அவைகளின் பல்வேறு இயக்கங்களும் என்பது தெளிவான விளக்கம்.
- உயிர் என்பது அரூபமனாது.
- அது அணுவுக்கு அப்பால் மௌனமாக உள்ளது.
- அதுவே அணுவில் இயக்கம், ஒலி, ஒளி இவைகளாக இருக்கிறது.
- ஜீவ ராசிகளின் புலன்கள் கூடுதலுக்கேற்பவும், தேவையுணர்வு, அனுபோகம், இன்ப துன்பம் என்பனவான அனுபவங்களுக்கு ஏற்பவும் அதே சக்தி அறிவாக இருக்கிறது.
- இந்தச் சக்தி எங்கும் நிறைந்து என்றும் உள்ளது. இந்தப் பேராதார நிலையாகிய உயிருக்கு பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 8.வையமெல்லாம் வாழட்டும்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

யமரோ தெஸ்ஸோ (□□□□□□ □□□□□□) என்ற ஜென் ஆசிரியர், அந்த

நாட்டு அரசனுக்கும் ஆசிரியராக இருந்தார்.

அவர் - சகல விதத்திலும் ஒரு ஜென் குருதான். அவருடைய வீடு- ஒரு சத்திரம் போலத்தான் இருக்கும்.

அது ஒரு ஏழை எளியர்களின் கூடாரம். ஆகவே - அவர் எப்பொழுதும் ஏழ்மை நிலையிலேயே இருந்தார். அவரிடம் ஒரு உடுப்புக்கு மாற்று உடுப்பு கூட இல்லை.



இவருடைய ஏழ்மையான ஆடையைக் கண்ட அந்த அரசன், அவருக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து, புதிய ஆடைகளை வாங்கிக் கொள்ளும்படி கூறினான்.

ஆனால், அடுத்த தடவை யமரோ தெஸ்ஸோ, அரசனிடம் வரும் பொழுது தமது பழைய ஆடையைத்தான் உடுத்தி வந்தார்.

இதைப் பார்த்த அரசன், "புதுஆடை என்னவாயிற்று?" என்று கேட்டான்.

யமரோ தெஸ்ஸோ...."உங்கள் குழந்தைகளுக்கு, நான் புதிய ஆடைகளை வாங்கிக் கொடுத்து விட்டேன், அரசே" என்றார்.

அளவான வறுமை ஆண்டவனின் ஆசீர்வாதம்.

ஒரு எளிய மனம் பிறர் மகிழ்ச்சியிலேயேத் தான் குறியாக இருக்கும். அது ஒருக்காலும் தன்னைப் பற்றிச் சிந்திக்காது.

வையமெல்லாம் வாழட்டும் – வேதாத்திரியம்

"வையமெல்லாம் வாழட்டும் வாழ்த்தி வளம் காத்தினிதாய்
வளரட்டும் மெய்யறிவு வாழ்க்கை இன்பம் துய்த்தலிலே

உய்ய மெய்பொருள் நாட்டம் உலகத்து மக்களிடம்
ஓங்குக மேலோங்குக நம் உள்ளமெல்லாம் ஒன்று"

(ஞாக.பா.1647)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 9. பழுக்கும் ஞானம்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

போதி தர்மர் தன் வாரிசைத் தேர்ந்தெடுத்தல்.


ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, போதிதர்மர் மீண்டும் இந்தியாவுக்கு வந்தபோது, ஆயிரக்கணக்கான மக்கள் அவருடைய சீடர்களாகிவிட்டனர்.

அவர்களில் நான்கு பேரை இறுதி சோதனைக்கு அவர் தேர்ந்தெடுத்திருந்தார்.

ஏனென்றால் -அந்த நான்கு பேரில் ஒருவர் சீனாவில் தனது பணியைத் தொடர அவரது வாரிசாக தேர்வு செய்யப்படுவார்.

ஆயிரக்கணக்கான சீடர்கள் அங்கே அமர்ந்திருந்தாலும் பெரும் மௌனம் மட்டுமே அங்கு இருந்தது.

அந்த நான்கு பேரும் அதற்கு தகுதியானவர்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், ஆனால் யார் மிகவும் தகுதியானவர்கள் என்று சொல்வது மிகவும் கடினம்.



போதிதர்மர் முதல் மனிதரிடம், “ஞானத்தின் சாரத்தைச் சொல்லுங்கள்” என்று கேட்டார்.

அந்த மனிதன், “ஞானத்தின் சாராம்சம் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது” என்றார்.

போதிதர்மர், “உங்களிடம் என் சதை இருக்கிறது, ஆனால் சதை மிகவும் ஆழமாக இல்லை. நீங்கள் என் வாரிசாகத் தேர்வு செய்யப்படவில்லை.

நீங்கள் கூறியது சத்தியத்தின் தொலைதூர எதிரொலியைக் கொண்டுள்ளது, ஆனால் அது ஒரு எதிரொலியாகும்.”

போதிதர்மர் - இரண்டாவது சீடரிடம், “நீங்கள் சொல்லுங்கள் ஞானத்தின் சாராம்சம் என்ன?” என்று கேட்டார்.

அவர் கூறினார், “ஞானத்தின் சாராம்சம் தியானம், முற்றிலும் அமைதியாக இருப்பது.”

போதிதர்மர், “உங்களிடம் என் எலும்புகள் உள்ளன, ஆனால் நீங்கள் என்னிடம் இல்லை. நீங்கள் என் வாரிசாக இருக்க முடியாது.”

போதிதர்மர்– மூன்றாவது மனிதனிடம் திரும்பி, அதே கேள்வியைக் கேட்டார், “ஞானத்தின் சாராம்சம் என்ன?”

மூன்றாவது நபர், “ஞானத்தின் சாராம்சம் என்னவென்றால், உங்கள் திறனை அதன் இறுதி உண்மைக்கு கொண்டு வருவதும், மலருவதும், உங்கள் இருப்புக்கு பூக்களைக் கொண்டு வருவதும் ஆகும்.”

போதிதர்மர், “உங்களிடம் என் மஜ்ஜை இருக்கிறது, ஆனால் இன்னும் நீங்கள் என் வாரிசாக இருக்க முடியாது. நீங்கள் மிகவும் நெருக்கமாக இருக்கிறீர்கள், ஆனால் நெருக்கம் கூட ஒரு தூரம்.”

போதிதர்மர் நான்காவது மனிதரிடம் திரும்பினார்,

அதே கேள்வியைக் கேட்டார். நான்காவது மனிதனின் கண்களில் கண்ணீர் இருந்தது, அவர் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் போதி தர்மாவின் காலடியில் சரிந்தார்.

போதிதர்மர்,  “உங்கள் மௌனம் எனக்குப் புரிகிறது. ஆனால் இந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு அது புரியாது. உங்கள் அனுபவத்தை வார்த்தைகளாக கொண்டு வர வேண்டும். சொல்!”

கண்ணீருடன் அந்த மனிதன், “எனக்குத் தெரியாது” என்றார்.

மேலும் போதிதர்மர், “நீங்கள் என் வாரிசாகப் போகிறீர்கள், ஏனென்றால்‘ எனக்குத் தெரியாது ’என்று சொல்லக்கூடிய நபர் ஏற்கனவே ஞான ஆலயத்தின் வாசலை அடைந்துவிட்டார்.



அவர் ஏற்கனவே வாசலில் நிற்கிறார். அவரது அப்பாவித்தனம், அவர் அறியாதது, தெரிந்து கொள்வதற்கான ஆரம்பம்.”

ஒரு உண்மையான குரு உலகம் முழுவதையும் கண்டிக்கப் போகிறார்,

அவர் உங்களுக்கு எதையும் கொடுக்கவில்லை மாறாக, அவர் உங்களிடமிருந்து பொருட்களை எடுத்துச் செல்கிறார்.

ஒரு குழந்தையைப் போன்ற அப்பாவித்தனமான நிலையில் அவர் உங்களை முற்றிலும் நிர்வாணமாக விட்டுவிடுகிறார்.

அங்கிருந்துதான் உங்கள் உண்மையான வளர்ச்சி தொடங்குகிறது. அங்கிருந்துதான் உண்மையான ஆரம்பம்.

ஞானத்தை விட பெரியது எது? ஞானத்தை விட அப்பாவித்தனம் பெரியது, ஏனென்றால் ஞானம் என்பது வெற்று வார்த்தைகளின் தொகுப்பு மட்டுமே.

அப்பாவித்தனம் என்பது உங்கள் முழு இருப்பின் மாற்றமாகும், நீங்கள் எல்லா தூசுகளையும் சுத்தம் செய்வது போல – நீங்கள் ஒரு குளியல் எடுத்துவிட்டீர்கள்.

அப்பாவித்தனத்தின் புத்துணர்ச்சி, அப்பாவித்தனத்தின் இளமை, மெதுவாக மெதுவாக ஆழமடைந்து, உங்கள் அழியாத தன்மையைப் பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்துகிறது. (ஓஷோ)

நான்காவது சீடனுக்கு பழுத்த ஞானம் கிடைத்தது. எப்படி? வேதாத்திரியம் விடை சொல்கிறது.

"திறந்துகொள்! தான் தனது என்று சொல்லும்
　　சிற்றறையை! வெளியேவா! அகன்று நோக்கி
பறந்துலவு! உலக சமுதாயத்தின் பரப்பகத்தில்
　　பற்றுஅறும். கடமையினால். பழுக்கும் ஞானம். (ஞாக.1367)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 10. உயிராசையும் இல்லை! பண ஆசையும் இல்லை!

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு, தைகான் ஒரு நாள் இரவு தம் அறையில் அமர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

திருடன் ஒருவன் கத்தியுடன் உள்ளே நுழைந்ததைப் பார்த்துவிட்ட குரு கேட்டார்.




"உனக்கு என்னப்பா வேண்டும்? உயிரா? பணமா?"

திருடன் திகைத்துப் போனான். திருடன், மிரட்டுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது பற்றி ஏமாற்றம் அடைந்தான்.

"நான் பணத்திற்காகத்தான் வந்தேன்!" என்றான் திருடன், மெல்ல.

"சரி, அதை வந்ததும் சொல்ல வேண்டியது தானே!"என்று சொல்லி அவனுக்குக் கணிசமான அளவு பணம் கொடுத்துவிட்டு அமைதியாகக் கடிதம் எழுத ஆரம்பித்தார்.

திருடனுக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது. குருவின் அமைதி அவனை ஏதோ செய்தது.

கையில் பணத்துடன் வெளியே போகத் திரும்பினான் திருடன்.

"தம்பி, போகும்போது கதவைச் சாத்திவிட்டுப் போ!" என்றார் குரு, கடிதம் எழுதியபடியே.

திருடன் ஒரு கணம் அவரைத் திரும்பிப் பார்த்து மெல்லக் கதவைச் சாத்திவிட்டு வெளியேறினான்.

சில நாட்களில் அவன் பிடிபட்டான். காவலரிடம் அவன் இப்படிச் சொன்னான்,

நான் நீண்ட நாளாகத் திருட்டுத் தொழில் செய்கிறேன். ஆனால் அந்த குரு மாதிரி ஆளை நான் பார்த்ததே இல்லை. அவர் ரொம்ப

பயங்கரமானவர். கத்தியைத் தூக்கிக் காட்டுவதற்கு முன்பே, "உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டார்.

பணத்தைத் தைரியமாகத் தந்தார். நான் பயந்து போய்விட்டேன். ஐயா, நான் சிறைவாசம் முடிந்தவுடன் தைரியத்தைக் கற்றுக் கொள்ள அவரிடம்தான் போகப் போகிறேன்" என்றான்.

ஞானிக்கு உயிராசை இல்லை. பண ஆசை இல்லை.

ஆசையை முறைப்படுத்தச்சொல்கிறது வேதாத்திரியம்.

"அறிவுநிலை இயங்க முறை விளைவு எல்லாம்
அறியாமல் ஆசைகளை அடக்கி விட்டால்,
அறிவில் எழும் விரைவு திசை மாற்றம் பெற்று,
அதன் விளைவாய் அமைதியின்மை உடல் நோயுண்டாம்.
அறிவது தன்தேவை, பழக்கம், சந்தர்ப்ப
அமைப்புகள் ஒக்க அறுகுணங்களாகும்.
அறிவின் நிலை மாற்றம் உணர்ந்து அவ்வப்போது
அவற்றை நற்குணமாக்கும் பயிற்சி வேண்டும்"
(மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து பா.பக்.126)

ஜென்-வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 11. விதி, சந்தர்ப்பம் மதி
## (விதியை மாற்றி அமைக்கலாம்)

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு முறை ஜப்பானிய ராஜா எதிரிகளை தாக்க ஓர் இராணுவ படை ஒன்றை தயார் செய்து, போருக்கு தயாரானார்.

அவர் “எப்படியும் இந்த போரில் வெற்றி பெறுவோம்” என்று நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால் அந்த படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந்தனர்.

இதனால் அந்த ராஜா தன் படை வீரர்களுக்கு தைரியத்தை வரவழைக்க என்ன செய்யலாம் என்று ஒரு ஜென் துறவியைப் பார்த்து, கேட்கச் சென்றார்.

அப்போது அந்த துறவி ராஜாவிடம், ஒரு யோசனையை சொன்னார். அதேப்போல் ராஜாவும் செய்தார்.

துறவி சொன்னதுபோல், அந்த ராஜா போருக்குச் செல்லும் வழியில், அவர்கள் குல தெய்வ கோவிலில் நிறுத்தி பிரார்த்தனை செய்தார்,

ஒரு நாணயத்தை எடுத்து வீரர்களின் முன் “நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றி விடுவேன், தலை விழுந்தால் நாம் வெற்றி பெறுவோம் இல்லையேல் போரில் தோற்போம்” என்று துறவி சொன்னதைச் சொன்னார்.

பின் அவர்களிடம் “நம் தலை விதியை இந்த நாணயம் சொல்லும்” என்று கூறி நாணயத்தை சுழற்றினார். அனைவரும் அதை கூர்ந்து கவனித்தனர். அப்போது தலை விழுந்தது.




அதனால் அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் எதிரிகளை தாக்கி வெற்றிப் பெற்றனர்.

யுத்தத்திற்கு பின்னர், துணை மந்திரி “விதியை யாராலும் மாற்ற முடியாது.” என்று ராஜாவிடம் சொல்ல “ஆம், என்று ராஜா சொல்லி அந்த நாணயத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதை” காண்பித்தார்.

நம்பிக்கையுடன் செயல்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றியும் அமைக்கலாம்.

"விதி என்பது, இயற்கையின்
இயக்க அமைப்புகளும்
இயக்க நியதிகளும் ஆகும்.
இயற்கையில் உள்ள
எல்லா நிகழ்ச்சிகளும் விதிதான்.
அதைத் தெரிந்து அறிவால்
அதற்கு முரண்படாது
அனுபவிக்கும் பொழுது
அதை மதி என்று சொல்கிறோம்." (வேதாத்திரி மகரிஷி)

ஜென் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 12.பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு பெரிய பணக்காரன் ஒருவன் ஜென் துறவியை சந்தித்து, "நான் என் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருப்பதை நினைவூட்டும் வகையில் ஏதாவது எழுதிக் கொடுங்கள்" என்று கேட்டான்.

அதற்கு அந்த மாஸ்டர் ஒரு காகிதத் துண்டை எடுத்து, அதில் "தந்தை இறக்கிறான், மகன் இறக்கிறான், பேரன் இறக்கிறான்" என்று எழுதிக் கொடுத்தார்.



அதைப் படித்த அவனுக்கு ஒரே கோபம் மூண்டது.

"என்ன? நான் உங்களிடம் என்னை ஊக்குவிக்கும் வகையிலும், என் வருங்கால சந்ததியினர் அதைப்

படித்து வாழ்க்கையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு கேட்டால், நீங்கள் என் மனம் புண்படும் வகையில் எழுதித் தருகிறீர்களே!" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

அதற்கு துறவி "ஆமாம். நானும் நீ கேட்டது போல் உன் குடும்பத்துடன் சேர்ந்து வாழ்ந்த ஒரு மகிழ்ச்சியான ஒன்றைத் தான் எழுதியுள்ளேன்.

எப்படியெனில், ஒரு வேளை உன் மகன் முதலில் இறந்துவிட்டால், அது ஒவ்வொருவரின் மனதிலும் பெரும் வலியை உண்டாக்கும்.

அதுவே உன் பேரன் முதலில் இறந்தால், அது தாங்க முடியாத அனுபவமாக இருக்கும்.

எப்படியிருந்தாலும் உங்கள் குடும்பத்தில் இருப்பவர்கள் வரிசையாக இறக்கப் போகிறார்கள். அது தான் வாழ்க்கைப் பற்றிய இயற்கையின் உண்மை.

ஆகவே நானும் அதை, அந்த காகிதத்தில் எழுதியுள்ளேன். எப்படியிருப்பினும் இந்த உலகில் பிறக்கும் அனைவருக்குமே வலி நிச்சயம் இருக்கும். அதையே சந்ததியினரும் பின்பற்றுவர்.

ஆகவே இந்த காகிதத்தில் இருப்பது எப்போதும் அழியாததாய் இருக்கும்" என்று விளக்கினார்.

நிலையாமை நினைவிற்கொள் என்கிறது வேதாத்திரியம்

"பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு இதை
மறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை".(வேதாத்திரியார் ஞாக.800)

யாரால் முடியும்?

"பிறந்தவர்கள் அனைவருமே பின் இறந்தார், இறப்பார்,
பேருலகில் பிளவில்லாக் கருத்து இது எல்லார்க்கும்.

மறந்தவர்கள் மயக்கத்தால் மண், பால், பொன் பெருவிருப்பில்
மாறிமாறிச் சிக்கி மற்றவர்க்கும் கேடாற்றி,
அறம்வழுவிச் செயலாற்றி, ஆன்மாவின் சிறப்பிழந்தார்.
அறிவின்நிலை கண்டோரோஅவற்றையெல்லாம் தெளிவாக்கிச்
சிறந்த வாழ்க்கைக் கேற்ற செயல்முறைகள் போதித்தார்.
சிந்தனையை உணர்த்தியுள்ளார். சீர்திருத்தினார் உலகை."
(ஞாக.பா.273)

ஜென் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 13. எதிர்பார்த்தல் ஏமாற்றமே

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு முறை ஜென் துறவி ஒருவர், தன் சீடர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது அவரது சீடர்கள் துறவியிடம், கதை கூறுமாறு கேட்டனர். அதற்கு அந்த துறவியும், அவர்களுக்கு ஒரு வாழ்க்கை பாடம் புகட்டும் வகையில் கதை சொல்ல ஆரம்பித்தார்.

"ஒரு வியாபாரி ஒருவன் ரோட்டில் நடந்து கொண்டு சென்றான். அப்போது அந்த வியாபாரிக்கு எதிரே வந்தவன், அவனை நிறுத்தி, "என்னை ஞாபகம் உள்ளதா?" என்று கேட்டான்.

பின் "உங்களுக்கு என்னை நினைவு இருக்கிறதோ இல்லையோ, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்த நகரத்திற்கு வந்த போது, நான் என்னிடம் பணம் இல்லை என்று உங்களிடம் பணம் கேட்டேன்.

அதற்கு நீங்களும் என்னிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து, ஒருவரின் வெற்றிப் பாதையில் செல்ல இது உதவட்டும் என்று வாழ்த்தி கொடுத்து உதவி புரிந்தீர்கள்" என்று அவருக்கு ஞாபகப்படுத்தினான்.



அந்த வியாபாரியும் யோசித்து, பின் அந்த வியாபாரி "ஆம், நினைவுக்கு வந்துவிட்டது என்று சொல்லி, வேறு என்ன சொல்லுங்கள்" என்று ஆவலுடன் கேட்டான்.

அதற்கு அவன் "இல்லை எப்படி அப்போது எனக்கு பணம் கொடுத்து உதவி புரிந்தீர்களோ, அதேப் போல் இப்போதும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான்.

அந்த வியாபாரி இப்படி கேட்டதும் "வியந்து போனேன்." என்று சொன்னார்.

பின் தன் சீடர்களிடம், ஒருவர் தமக்கு ஒரு முறை எதிர்பாராமல் உதவி செய்தால், மீண்டும் மீண்டும் அவர்களிடம் எதையும் எதிர் பார்க்கக்கூடாது.

நமக்கு எந்த நேரத்தில் எது கிடைக்க வேண்டுமோ, அந்த நேரத்தில் நமக்கு கிடைக்க வேண்டும் என்று இருந்தால், நிச்சயம் அது நமக்கு கிடைக்கும் என்று சொன்னார்.

"எதிர்பார்த்தல் ஏமாற்றமே!" என்கிறது வேதாத்திரியம்.

"எதிர்பாத்தல் எப்போதும் எவரிடமும்
ஏமாற்றமே விளைக்கும்? ஏதுமனதில் அமைதி
எதிர்பார்த்தல் எனும்நோயை மாற்றிமன நலம்காண
எது உளதோ அதைஏற்று உதவிசெய்தே வாழ்ந்திடுவோம்"
(ஞாக.791)

ஜென்-வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 14. நாளைக்காக கவலைப்படாதிருங்கள்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

பல்கலைக்கழக மாணவன் ஒருவன், கசன் என்கின்ற ஜென் துறவியை பார்க்கச் சென்றான்.

அப்போது அவரிடம் “நீங்கள் எப்போதாவது கிறித்துவர் பைபிளைப் படித்ததுண்டா?” என்று கேட்டான்.

அதற்கு அந்த துறவியும் “இல்லை. எங்கே, அதை எனக்கு படித்து காட்டு” என்றார்.

அந்த மாணவனும் உடனே தன்னிடம் இருந்த பைபிளைத் திறந்து செயின்ட் மத்யூ-வின் வாசகத்தை வாசித்தான்.

அந்த பைபிள் வாசகத்தில் ஒன்றான: “என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள்.



ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதும் இல்லை, அறுக்கிறதும் இல்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதும் இல்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கும் போது நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?....

உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன?
காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறது என்பதைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதும் இல்லை;

என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்தது இல்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிகம் நிச்சயமல்லவா?

ஆகையால் நாளைக்காக கவலைப்படாதிருங்கள்; நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும்." என்று படித்து முடித்தான்.

உடனே அந்த துறவி "எவனொருவன் இந்த வார்த்தைகளை கடைபிடிக்கிறானோ, அவன் பெரும் ஞானம் கொண்டவனாவான்" என்று கூறினார்.

மேலும் அந்த மாணவன் மறுமுறை அந்த பைபிளில் மற்றொரு வாக்கியத்தைப் படித்தான்.



அந்த வாசகம் என்னவென்றால் "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்." என்பதாகும்.

இந்த வாசகத்தைக் கேட்டதும் துறவி "அருமை. இதைத் தான் புத்த போதனையிலும் சொல்லப்படுகிறது. ஆகவே இந்த உலகில் எதுவும் புத்த போதனையை விட அப்பாற்பட்டது அல்ல. அனைத்தும் புத்த போதனைக்கு நெருங்கினவை தான்" என்று குறிப்பிட்டார்.

நாளைக்காக கவலைப்படுவது ஏன்?" வேதாத்திரியம் விடை தருகிறது.

“தப்புக் கணக்கிட்டுத் தான் ஒன்றை எதிர்ப்பார்த்தால்
ஒப்புமோ இயற்கை விதி? ஒழுங்கமைப்பிற் கொத்தபடி
அப்போதைக் கப்போதுஅளிக்கும் சரிவிளைவு.
எப்போதும் கவலையுற்று இடர்ப்படுவர், இதை உணரார்.”
(ஞாக.1573)

ஜென்-வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 15. முயற்சி அளவே ஞானத்தின் விளைவு!

(ஜென்னும் வேதாத்திரியமும்)

குரு மரணப்படுக்கையில் இருந்தார். அருகில் அவரின் சீடன் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டான்.

குரு மெல்ல அவனை அழைத்து “சீடனே ஏன் கவலைப் படுகிறாய்? உன்னிடம் நான் எப்பொழுதும் இருப்பேன். கலக்கம் அடையதே....”

கலங்கிய கண்களுடன் சீடன் கூறினான். “குருதேவா...நீங்கள் கூறியபடி ஜபம், தியானம் எல்லாம் செய்து வருகிறேன்.

ஆனால் ஆன்மிக உயர்நிலை அடையும் காலம் எப்பொழுது தெரியவில்லை.

எதுவரை எனது ஆன்மிகப் பயிற்சியைத் தொடர்வது? உங்கள் காலத்திற்குப் பிறகு யாரிடம் நான் கேட்பது?”

அணையும் ஜோதி பிரகாசமாக சுடர்விடும் என்பதை போல ஜோதிர்மயமான முகத்துடன் சிஷ்யனைப் பார்த்தார் குரு.

“கவலை கொள்ளாதே. இந்தக் கட்டிலுக்கு அடியில் ஒரு பெட்டி இருக்கிறது. அதன் உள்ளே உனக்கு பிற்காலத்தில் உபதேசிக்க வேண்டியதை வைத்திருக்கிறேன்...அது அனைத்து விஷயங்களையும் போதிக்கும். எனது உபதேசம் தேவைப்படும் பொழுது மட்டும்

பெட்டியைத் திறந்து பார். எனது ஆசிகள்....” எனக் கூறியபடி அவரின் பிராணன் உள்ளே அடங்கியது.

நாட்கள் சென்றன. தனது ஆன்மிக சாதனையில் தனக்குப் பலன் கிடைப்பதாக சீடனுக்குத் தெரியவில்லை. தியானம், ஜபம் ஆகியவற்றை விட்டுவிடலாமா என எண்ணினான்.

குருவின் உபதேசத்தைக் கேட்க பெட்டியைத் திறந்தான். சீடன் ஞானம் அடைந்தான்.

நாட்கள் சென்றன. சீடன் கூறிய கருத்துகளை ஏற்காமல் மற்றவர்கள் கலகம் செய்தனர். மீண்டும் குருவின் உபதேசத்தைக் கேட்க பெட்டியைத் திறந்தான்.

அதற்குப் பின் மற்றவர்கள் அவனது கருத்துகளை ஏற்றுக் கொண்டனர்.

நாட்கள் சென்றன....

தனது இறுதிக் காலத்தை அடைந்தான் அந்த சீடன். பிறகு குருவான அவன், தனது சீடனைக் கூப்பிட்டுக் கூறினான்.

“எனது பிரிய சீடனே, எனது குரு எனக்கு அளித்த உபதேசத்தை உனக்கு அளிக்கிறேன். எனது உபதேசம் தேவையான பொழுது மட்டும் இந்தப்பெட்டியைத் திற, எனது உபதேசம் கிட்டும்.”

சீடனின் சீடனான பரம சீடனின் ஆன்மிகச் சாதனையில் தொய்வு ஏற்பட்டது. குருவின் உபசேத்தை அறிய பெட்டித் திறந்தான். அதில் எழுதி இருந்த வாசகம்.....

“இன்னொரு முறை முயற்சி செய்.”

சீடனுக்கு மட்டுமல்ல, நமக்கு ஆன்மிக சாதனையில் தொய்வு ஏற்படும் பொழுதும் இந்த உபதேசம் உதவும்.

குருவானவர் உபதேசிக்கலாம். ஆனால் ஆன்மிக சாதனையைத் தனி ஒரு மனிதன் செய்து உயர்வடைய வேண்டும்.

எளிமையாகச் சொல்ல வேண்டுமானால் குரு சமைத்துக் கொடுக்கலாம், ஏன் ஊட்டி கூட விடலாம். ஆனால் நாம் தான் செரிக்க வேண்டும்.

முயற்சி அளவே ஞானத்தின் விளைவு என்பது வேதாத்திரியம்.

"வித்து. நிலம் உரம் தண்ணீர் காவற்கேற்ப
விளைவுதரும். அதுபோல உனக்கு ஆசான்
அத்துவித தத்துவ வித்தறிவி லிட்டால்
அதற்கொழுக்கம் என்ற உரம், அறிவை ஒன்றும்
நித்தவம், ஆராய்ச்சி என்ற தண்ணீர்
நீ சலனமுற்று அறு குணங்கள் ஆகா
வித்தைஎனும் காவல், இவையனைத்தும் வேண்டும்.
விளைவாக நீயடையும் கனியே ஞானம்"
(ஞாக.1483)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 16. பயிற்சியும் முயற்சியும்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

மனம் தெளிவடைய **அருமையான** ஜென் கதை.

ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான் அவனுக்கு எல்லாம் இருந்தாலும் மனதில் நிம்மதி இல்லாமல் ஒரே குழப்பதிலே இருந்தான்.

ஒரு ஜென் குருவை சந்தித்து ஐயா எனக்கு ஜென் கற்க ஆசை சொல்லிக் கொடுங்கள் என்றான் .

இவனின் அவசரமான பேச்சை கவனித்த குரு, இதோ பாரப்பா உன் மனம் ஒரு நிலையாக இல்லை, நான் என்னதான் கற்றுக் கொடுத்தாலும் உனக்கு புரியாது நீ போயிட்டு அப்பறம் வா என்கிறார்.

இருந்தாலும் இவன் விடவில்லை.

ஐயா என்னால் போகமுடியாது தயவுசெய்து எனக்கு நீங்க ஜென் சொல்லித் தரனும். எனக்கு நிறைய குழப்பங்களும் சந்தேகமும் இருக்கு அதெல்லாம் நீங்கதான் தீர்த்து வைக்கணும் என்கிறான்.

அப்படியென்றால் சரி நான் உன்னை எனது சீடனாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை இங்கே நீ ஒரு ஆறுமாதம் மௌன விரதம் கடைபிடிக்கவேண்டும் சரியா?

ஆறு மாதம்மா? சற்று யோசித்து- சரிங்க ஐயா இருக்கிறேன் என்று சம்மதம் தெரிவித்தான்.

ஆனால் ஆறு மாதம் கழித்து எனது சந்தேங்களை நீங்க போக்கணும் சரியா?

சரி சரி அதெல்லாம் உன் மனதில் வச்சிக்கோ நான் ஆறு மாதம் கழித்து உனது அனைத்து குழப்பங்களையும் நீக்குகிறேன் என்றார் குரு.

அதன்பின் அந்த பணக்காரன் ஆசிரமத்தில் சேர்ந்து மௌன விரதத்தை கடைபிடிக்கிறார்.

அடுத்தடுத்து அவருடைய நேரங்கள் முழுவதும் தியானம், மந்திரம் ஜெபிப்பது, ஆன்மீக சொற்பொழிவை கேட்பது இப்படியே நாட்கள் ஓடியது.

மெல்ல மெல்ல அவருடைய மனம் தெளிந்தது, முன்பு குழம்பிருந்த விஷயங்கள் எல்லாமே தெளிவாக புரிய ஆரம்பித்தது.

ஆறுமாதம் கழித்து குரு அவரை அழைத்தார், நீ மௌன விரதம் இருந்தது போதும் இப்போது உனது சந்தேகங்களை கேள் என்றார்.

உடனே அந்த பணக்காரன் அமைதியான குரலில் கேட்பதற்கு ஒன்றும் இல்லை குருவே எல்லா குழப்பங்களும் எனக்கு நீங்கியது இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று.

இந்த கதை நமக்கு உணர்த்துகிறது? சும்மா கேள்வி கேட்டால் மட்டுமே நமக்கு பிரச்சனைகள் நீங்காது மற்றும் ஆன்மீகத்தில் வளர்ச்சி அடையமுடியாது. சொல்லும் விசயங்களை கேட்டு சில மாதங்களோ அல்லது வருடங்களோ பயிற்சி செய்யவேண்டும்.

**மனம் குழப்பம் என்றால் அப்படியேதான் இருக்கும், சிலநேரங்கள் மௌனமாக மனதை கவனியுங்கள்**

அப்போதுதான் மனம் தெளிவடையும். மனம் தெளிந்தால் தானாக எல்லாமே புரியவரும்.

**மனம் சுழலாமல் அலைபாயாமல், வெட்டவெளியில் திளைத்திருக்க என்ன செய்ய வேண்டும்? வேதாத்திரியம் வழி காட்டுகிறது,**

**"அகத்தவத்தால் மனச்சுழலைப் படிப்படியாய்க் குறைத்து**
**ஆதிநிலை ஒன்றுவரை பழக்கமாக்கிக் கொண்டால்,**
**இகத்துணர்வோடு எல்லையிலா இறைநிலையும் உணர**
**ஏற்றபடி அவ்வப்போ பொருந்திவரக் காண்போம்.**
**மிகத் தெளிவும் உள்ளுணர்வும முற்றறிவும் கிட்டும்.**
**மூலம் எனும் இறைமுதலாய் மனிதன்வரை வந்த**
**மகத்துவமாம், முத்தரமே முத்திறமாய் மலர்ந்த**
**மறைபொருளை அறிவுணரும், பிரம்மஞானம் கிட்டும்"**

**(ஞாக.பா.1446)**

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 17.குருவின் மேன்மை

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

குருகுல பாடம் முடிந்து ஊர் சென்ற சீடன் ஒருவன் மீண்டும் குருவிடம் வந்து தயங்கியவாறே " குருவே தங்களிடம் நான் படித்ததெல்லாம் மறந்து விட்டது மீண்டும் அந்தப் பாடங்களை சொல்லிக்கொடுப்பீர்களா?" எனக் கேட்டான்.

"இதற்கா இத்துணை தயக்கம். உட்கார் சொல்லித் தருகிறேன்" என்ற குரு சீடனுக்கு முதலில் இருந்து பாடங்களை சொல்லித் தந்தார்.

"நன்றி குருவே பாடங்கள் நன்கு விளங்கிவிட்டன சென்று வருகிறேன்" எனக் கிளம்பினான் சீடன்.

ஒரு மாதத்திற்கு பின் மீண்டும் குருவிடம் வந்து "சுவாமி எனக்கு மீண்டும் பாடங்கள் மறந்து போய்விட்டன சொல்லித் தருவீர்களா?" எனக் கேட்கிறான்.

புன்னகைத்த குரு "அதனாலென்ன போதிக்கிறேன்" எனக் கூறி போதனையை ஆரம்பித்தார். சில நாட்களுக்குப் பின் நன்றி கூறி விடை பெற்றான் சீடன்.

அவன் போனதும் மூத்த சீடன் ஒருவன் "குருவே அவன் மீண்டும் மீண்டும் வருகிறான் நீங்கள் சொல்லித் தந்துகொண்டே இருக்கிறீர்களே இது முறையா? முட்டாளான அவனால் கிரகிக்க முடியவில்லை என்றால் அவனை வரவேண்டாம் என்று சொல்ல வேண்டியதுதானே?" என்றான்.

தரிசு பூமியாக இருந்தாலும் அந்த இடத்தைப் பதப்படுத்தி தண்ணீர் ஊற்றினால் விரைவில் விளை நிலமாக மாறிவிடும் அல்லவா?

அதுபோலத்தான் அவனும். அவன் பதப்படும் வரை சொல்லி கொடுக்க வேண்டியது ஆசானாகிய எனது கடமை" என குரு சொல்ல, குருவின் மேன்மையை உணர்ந்தான் மூத்த சீடன்.

குருவின் மேன்மையை பறைசாற்றுகின்றது வேதாத்திரியம்.

"இறைவெளியே அருளரசாய்
   எங்கும் நிறைந்துள்ள தெய்வம் என்றுகாட்டி
 இயக்கமூலம் விண்ணோ
   இறைவெளியின் நுண்குதி யென்றுணர்த்தி

முறையாக விண் சுழன்று
   முழு ஆற்றலை அலையாய் இடைவிடாமல்
 மோதுங்கால் இருப்பு நிலையோடு உரசி
   முட்டைகள் போல கோடி கோடி

மறைபொருளாம் நிழல் விண்கள்
   மாஆற்றலாய் எழுந்து வெளியில் சேர
 மாயஉருகாந்தமென
   மாறியே அக்காந்தம் விண்கூட்டொக்க

நிறைவெளியில் விண்களிடை
   நேரழுத்தம் ஒலிஒளியாய் மணம் சுவையாய்
 நிலையோடலை கருமையம்
   நியதிகளை விரித்துரைத்த குருவே வாழ்க!"
(ஞாக.பா.15)

இறைநிலையின் தன்மாற்றங்களையெல்லாம் ஒவ்வொரு கருமையத்திலும் அலை வடிவில் சுருங்கி தரமாயிருந்து, ஏற்ற கால சூழ்நிலையில் விரித்துக் காட்டுகிறது என்ற இறை நியதியை விரிவாக அறிவிற்குப் பொருந்தும் படியாக விளக்கிக் காட்டிய குருவை வணங்குவோம். வாழ்த்துவோம்.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 18.. ஞானம் என்பது அறிந்து கொள்வது.
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

அது ஒரு பெரிய குருகுலம். பல ஜென் துறவிகள் அங்கு தங்கியிருந்து கல்வி பயின்று வந்தனர்.

குருகுலத்தில் இருந்த தலைமை குருவுக்கு மிகவும் வயதாகிவிட்டது. அதனால் அவர் படுத்த படுக்கையாக இருந்தார். அவரிடம் தலைமை சீடன் ஒருவர் இருந்தார்.

ஒரு நாள் தனது கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, அமைதியாக அமர்ந்திருந்தார், தலைமை சீடன்.

அப்போது தலைமை குரு, அவரை அழைப்பதாக தகவல் வந்தது. இதையடுத்து அவர், குருவின் அறையை நோக்கிச் சென்றார்.

அறைக்குள் குளிரை தாங்க முடியாமல், போர்வையால் போர்த்திய நிலையிலும் நடுங்கியபடி அமர்ந்திருந்தார் குரு. அவருக்கு எதிரில் விறகுகள் குவித்து, நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.

தனது சீடனைப் பார்த்ததும், ‘உட்கார்’ என்று சைகை காட்டினார், குரு. தொடர்ந்து அவரும், படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தார்.

குருவானவர் பேச்சைத் தொடர்ந்தார். ‘என்னை வயோதிகம் வாட்டி எடுக்கிறது. உடலில் தள்ளாமை ஏற்பட்டுவிட்டது. என்னுடைய சீடர்களிலேயே நீ தான் முதன்மையானவன். எனவே எனக்குப் பிறகு, இந்த குருகுலத்தை ஏற்று நடத்தும் பொறுப்பை நீதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்’ என்றார் தலைமை குரு.

அதை ஏற்றுக்கொள்வது போல், தலைமை சீடன் அமைதியாக

தலையாட்டினார். இதையடுத்து குரு தன் அருகில் இருந்த புத்தகத்தை எடுத்து சீடனிடம் நீட்டினார்.



‘இதை வாங்கிக்கொள். இது ஒரு அரிய பொக்கிஷம். உனக்கு இந்த புத்தகம் நல்வழியைக் காட்டும்’ என்று கூறி அதை வழங்கினார்.

ஆனால் தலைமை சீடனோ, அதை வாங்க மறுத்தார். ‘எனக்கு இது வேண்டாம் குருவே’.

தன் சீடன் இந்த புத்தகத்தின் வலிமை தெரியாமல் மறுக்கிறான் என்று நினைத்த குரு, மீண்டும் அவனிடம் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வலியுறுத்தினார்.

அதற்கு தலைமை சீடன், ‘இல்லை குருவே.. எனக்கு தேவையானதையெல்லாம் தாங்கள் எப்போதோ கற்பித்துவிட்டீர்கள். இது எதற்கு?’ என்று கூறி மீண்டும் மறுத்தார்.

ஆனால் குரு, ‘அப்படிச் சொல்லாதே. இது வேத நூல். பல தலைமுறைகளாக இந்த புத்தகம், நம்முடைய மடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது’ என்றார்.

தலைமை சீடன் அப்போதும் குரு கொடுத்த புத்தகத்தை ஏற்கவில்லை.

உடனே குரு, தன்னுடைய சீடனைப் பார்த்து கேட்டார். ‘பசி வந்தால் உணவுக்கு என்ன செய்வாய்?’.

‘பாத்திரத்தை எடுத்துக் கொண்டு யாசகம் பெற புறப்படுவேன்’ என்றார் தலைமை சீடன்.

‘சரி.. ஒருவர் பிட்சையிடும்போது என்ன வேண்டும் என்று கேட்பாய்?’ என்று அடுத்த கேள்வியை முன் வைத்தார் குரு.

தலைமை சீடனோ, ‘எதுவும் கேட்கமாட்டேன். அவர்கள் இடுவதை பெற்றுக் கொள்வேன் என்றார்.

‘அப்படி உன் பாத்திரத்தில் இடப்பட்ட பிட்சையாக இதை வைத்துக் கொள் என்று கூறி புத்தகத்தை நீட்டினார், அந்த மடத்தின் குரு.

மௌனமாக அந்த புத்தகத்தைப் பெற்றுக் கொண்ட தலைமை சீடன், அடுத்த நொடியே தன் கையில் இருந்த புத்தகத்தை அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் தூக்கிப் போட்டார்.

பதறிப்போனார் குரு. ‘அடப்பாவி என்ன காரியம் செய்து விட்டாய்? என்று அலறினார்.

இப்போதும் அமைதியாக பதிலளித்தார் தலைமை சீடன். ‘பிட்சை அளித்த யாருமே, தாங்கள் போட்ட பிச்சை என்ன ஆனது என்று பார்ப்பதில்லை குருவே.

அதுவும் இல்லாமல் ஞானம் என்பதே நெருப்புதானே. நெருப்பு நெருப்புடன் சேர்ந்துவிட்டது. வேதம் என்பது வெறும் எழுத்துக்கள். இவற்றிலா இருக்கிறது ஞானம்?’ என்றார் தலைமை சீடன்.

தன்னுடைய சீடன் தன்னை விடவும், பெரும் ஞானம் அடைந்தவன் என்பதை அந்த வார்த்தைகளில் இருந்து உணர்ந்து கொண்டார் குரு.

“ஞானமும் – முக்தியும்” ஒருமைத் தத்துவம் அறிந்தால் கிடைத்துவிடும் என்கிறது வேதாத்திரியம்.

தவபலமும், தனையறிந்த நிலையும் கொண்டு
    தனையடைந் தோர்க்கருள்புரியும் தகைமை யுள்ள
சிவநிலையோன் மெய்ஞ்ஞானி குருவாய் நின்று.
    சீடனது புருவமையம் விரலால் தீண்ட,
அவனிலவன் லயமாகி ஆசான் தொட்ட,
    அவ்விடத்தே ஞாபகத்தை ஒன்றி ஒன்றி,
உவமையிலாப் பேரின்பம் உள் உணர்ந்து,

ஒருமைத் தத்துவம் அறிந்தால், அதுவே முக்தி.” (ஞாக.பா.1464)

ஞானம் என்பது அறிந்து கொள்வது. அறிந்து கொண்டதை அனுபவமாக்கிக் கொள்வது முக்தி ஆகும்.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 19. வீடுபேறு எப்பபோது எய்தலாம்?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு நாள், ஒரு ஜென் துறவியைப் பார்க்க ஒரு சாமுராய் வந்து இருந்தார்.

நான் சொர்க்கம் மற்றும் நரகத்தைப் பற்றி அறிய விரும்புகிறேன்,” என்று சாமுராய் அந்த ஜென் துறவியிடம் கூறினார். இவைகள் உண்மையில் இருக்கிறதா என்றும் கேட்டார்.

அந்த ஜென் துறவி அவரைப் பார்த்து, “நீங்கள் யார்?” என்று கேட்டார்.

“நான் ஒரு சாமுராய்” என்று பெருமைமிக்க அந்த போர்வீரன் சொன்னார்.

உடனே அந்த ஜென் துறவி,

“ஹா!. இதுபோன்ற நுண்ணறிவுள்ள விஷயங்களை நீங்கள் புரிந்து கொள்ள முடியும் என்று நீங்கள் நினைப்பது எப்படி?

நீங்கள் ஒரு கொடூரமான, மிருகத்தனமான போர்வீரன்!

உங்கள் முட்டாள்தனமான கேள்விகளால் என் நேரத்தை வீணாக்காதீர்கள், "என்று அந்த துறவி கூறி, சாமுராயை தன் இடத்தை விட்டு விரட்ட தன் கையை அசைத்தார்.

கோபமடைந்த சாமுராய் துறவியின் அவமானங்களை தாங்கி கொள்ள முடியாமல். தன் வாளை எடுத்து அவரைக் கொலை செய்ய ஓங்கினார்.

"உடனே, இது நரகம் என்று அந்த துறவி அமைதியாக பதில் அளித்தார்".

சாமுராய் அதிர்ச்சியடைந்தார். அவன் முகம் மென்மையாகிவிட்டது. அந்த ஜென் துறவியின் ஞானத்தால் தாழ்த்தப்பட்ட அவர், தனது வாளை விலக்கி அவர் முன் வணங்கினார்.

அப்பொழுது,

"இது சொர்க்கம்," என்று ஜென் துறவி அமைதியாக கூறினார்.

## முழுமைப்பேறு – வேதாத்திரியம்

நிறைவடைந்த குருமூலம் நேர்முகமாய்க்
குண்டலினி யோகம் கற்று,
நித்தவம் ஆழ்ந்தாற்றி, உண்மை
உணரப்பெற்றால் முனைப்பு போகும்.
இறைவனது பகுதிநிலை உயிர் மனமாய்த்
தேர்ந்து, அதன் உறைவிடமாம்
உடலதுவோ சமுதாயம்உறப்பத்தி
செய்துபல பொருட்கள் ஈந்து,

முறையாக வளர்த்து பண்பாட் டுடனே
கல்வி தொழில் காப்பு தந்த
முழுக்கதையும், சிந்தனையின் முதிர்ச்சி யினால்
உணர்ந்து. வினைப்பதிவாய்ப் பெற்ற

கறைநீங்க, உயிரதனை இறை நிலைக்கும்

கனஉடலைச் சமூகத்திற்கும்
கனிவடனே அர்ப்பணிக்கும் தகைமை
வரும். இந்நிலையே முழுமைப்பேறாம்!"
(ஞாக.பா.1497)

இத்தகைய முழுமைப் பேற்றை அடைந்து வீடுபேற்று நிலையை அடைவோமாக!

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 20. மனம் என்பது பெருங்கடல்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஞாயிற்றுக் கிழமை, நியூயார்க் சர்வதேச ஜென் மையத்தில் சியுங் சான் தங்கியிருந்தபோது, ஒரு பெரிய விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த விழாவுக்கு அமெரிக்காவில் வசிக்கும் கொரியப் பெண்கள் பலரும் வந்திருந்தனர். அவர்கள் பைகள் நிறைய உணவையும் பரிசுகளையும் கொண்டு வந்திருந்தனர்.

பெண் ஒருவர், பெரிய பிளாஸ்டிக் மலர்க்கொத்து ஒன்றைப் பரிசாகக் கொண்டு வந்திருந்தார். அதை சியுங் சானின் அமெரிக்க மாணவர் ஒருவரிடம் புன்னகைத்தபடி கொடுத்தார். அந்த மாணவர்,

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அந்த பிளாஸ்டிக் மலர்களை, மேலங்கிகளைக் கொண்டு மறைத்தார்.

ஆனால், அங்கு வந்த மற்றொரு பெண் உடனடியாக அந்த மலர்க்கொத்தைக் கண்டுபிடித்து விட்டார். பெரு மகிழ்ச்சியுடன் அவற்றை எடுத்துக்கொண்டுபோய் தர்ம அறையின் பீடத்திலிருந்த பூ ஜாடியில் வைத்தார்.

அந்த மாணவருக்கு மிகவும் வருத்தமாகிவிட்டது. அவர் சியுங் சானிடம், “அந்த பிளாஸ்டிக் மலர்கள் ரசனைக் குறைவாக இருக்கின்றன. அவற்றைப் பீடத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய் வேறெங்காவது வைத்துவிட முடியாதா?” என்று கேட்டார்.

“உன்னுடைய மனம்தான் பிளாஸ்டிக்காக இருக்கிறது. இந்த மொத்தப் பிரபஞ்சமும் பிளாஸ்டிக் தான்” என்றார் சியுங் சான்.

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?” என்றார் மாணவர்.

“புத்தர் சொல்கிறார், ‘ஒருவரின் மனம் தூய்மையாக இருந்தால், மொத்தப் பிரபஞ்சமும் தூய்மையாக இருக்கும்;
ஒருவரின் மனம் களங்கத்துடன் இருந்தால், மொத்தப் பிரபஞ்சமும் களங்கத்துடன் இருக்கும்.’

ஒவ்வொரு நாளும், நாம் மகிழ்ச்சியற்ற பலரைச் சந்திக்கிறோம். அவர்களின் மனம் சோகமாக இருக்கும்போது, அவர்கள் பார்ப்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, தொடுவது என அனைத்துமே சோகமாக இருக்கும்.

மொத்தப் பிரபஞ்சமும் சோகமாகவே இருக்கும். மனம் மகிழ்ச்சியாக இருக்கும்போது, மொத்தப் பிரபஞ்சமும் மகிழ்ச்சியாக இருக்கும். நீ ஏதாவது ஒன்றுக்கு ஆசைப்பட்டால், அதனுடன் நீ பிணைக்கப்பட்டு விடுகிறாய்.

அதை நீ புறக்கணித்தாலும், அதனுடன்தான் நீ பிணைக்கப்பட்டி ருக்கிறாய். ஒரு பொருள் அல்லது விஷயத்துடன் பிணைக்கப்பட்டிருப்பது என்பது உன் மனத்துக்கான தடையாகிவிடும்.

அதனால், ‘எனக்கு பிளாஸ்டிக் பிடிக்காது’ என்பதும் ‘எனக்கு பிளாஸ்டிக் பிடிக்கும்’ என்ற இரண்டுமே பிணைப்புகள்தாம்.
உனக்கு பிளாஸ்டிக் மலர்கள் பிடிக்காது, அதனால்
உன் மனம் பிளாஸ்டிக்காகி விடுகிறது.

அதனால், மொத்தப் பிரபஞ்சமும் பிளாஸ்டிக்காக விடுகிறது. அவை எல்லாவற்றையும் கைவிடு.

அதற்குப் பிறகு, எதனாலும் தடையிருக்காது. மலர்கள் பிளாஸ்டிக்காக இருக்கின்றனவா அல்லது உண்மையாக இருக்கின்றனவா என்பதைப் பற்றி அக்கறைப்பட மாட்டாய்.

அவை பீடத்தில் இருக்கின்றனவா அல்லது குப்பைக் குவியலில் இருக்கின்றனவா என்பதைப் பற்றிக் கவலைப்பட மாட்டாய். இது உண்மையான விடுதலை.

ஒரு பிளாஸ்டிக் மலர் என்பது வெறுமனே பிளாஸ்டிக் மலர் அவ்வளவே. ஓர் உண்மையான மலர் என்பதும் வெறுமனே உண்மையான மலர் அவ்வளவே. நீ பெயர், வடிவத்துடன் பிணைக்கப்படத் தேவையில்லை" என்று சொன்னார் சியுங் சான்.

"ஆனால், நாம் இங்கு அனைவருக்குமான ஒரு அழகான ஜென் மையத்தை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறோம். எப்படி என்னால் அக்கறை காட்டாமல் இருக்க முடியும்? அந்த மலர்கள் மொத்த அறையின் அழகையும் பாழ்படுத்துகின்றன" என்றார் மாணவர்.



"யாராவது ஒருவர் புத்தருக்கு உண்மையான மலர்களை வழங்கினால், புத்தர் மகிழ்ச்சி அடைகிறார். யாராவது ஒருவருக்கு பிளாஸ்டிக் மலர்கள் பிடித்துபோய், அவற்றை அவர் புத்தருக்கு வழங்கினாலும், புத்தர் மகிழ்ச்சியாகவே இருக்கிறார்.

புத்தர் பெயருடனோ, வடிவத்துடனோ பிணைக்கப்படவில்லை. மலர்கள் பிளாஸ்டிக்கா அல்லது உண்மையா என்பது பற்றி புத்தருக்கு அக்கறை கிடையாது. அவர் நமது மனம் பற்றி மட்டும்தான் அக்கறைப்படுகிறார்.

பிளாஸ்டிக் மலர்களை வழங்கும் இந்தப் பெண்களிடம் தூய்மையான மனம் இருக்கிறது. அவர்களின் இந்தச் செயல் போதிச்சத்துவச் செயலாகும்.

உன் மனம் பிளாஸ்டிக் மலர்களைப் புறக்கணிக்கிறது. அதனால், நீ நல்லது, கெட்டது, அழகு, அசிங்கம் என்று பிரபஞ்சத்தைப் பிரித்து விட்டாய்.

அதனால், உன் செயல் போதிச்சத்துவச் செயலில்லை. புத்தரின் மனத்தை மட்டும் வைத்துக் கொள். அப்போது உனக்கு எந்தத் தடையும் இருக்காது. உண்மையான மலர்கள் நல்லது; பிளாஸ்டிக் மலர்களும் நல்லது.

இந்த மனம் பெருங்கடலைப் போன்றது. அதனுள் ஹட்சன் ஆறு, சார்லஸ் ஆறு, மஞ்சள் ஆறு, சீன நீர், அமெரிக்க நீர், தூய்மையான நீர், மாசடைந்த நீர், உப்பு நீர், தெளிந்த நீர் என அனைத்து நீரும் ஓடுகிறது.

‘உன் நீர் மாசடைந்திருக்கிறது. நீ எனக்குள் ஓடமுடியாது’ என்று கடல் ஒருபோதும் சொல்வதில்லை. அது எல்லா நீரையும் ஏற்றுக் கொள்கிறது. எல்லாவற்றையும் இணைத்து, கடலாகிறது.

அதனால்,நீ புத்தரின் மனத்தை வைத்துக் கொண்டால், உன் மனம் பெருங்கடலைப் போலாகிவிடும். இதுதான் ஞானத்துக்கான பெருங்கடல்” என்றார் சியுங் சான். அந்த மாணவர் ஆழ்ந்த வணக்கத்தைச் செலுத்தினார்.

மனம் பெருங்கடல் போல் உடையாமல் இருக்க வேண்டும். ஞானத்துக்கான பெருங்கடல் மனம் தான் என்கிறது வேதாத்திரியம்

“மனமது இயற்கையின் மாபெரும் நிதியலோ;
மனமதைத் தாழ்த்திட மயக்கத்தால் துன்பமே;
மனமதை உயர்த்தினால் மட்டில்லா இன்பமாம்;
மனதில் உளஎல்லாம் மற்றெங்கு தேடுவீர்?” (ஞாக.1785)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 21. மன ஒருமையும் சந்தோஷமும்
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

கல்லுடைக்கும் தொழிலாளி ஒருவன் தன் தொழிலை நன்கு மகிழ்ச்சியாக செய்து கொண்டு வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் அவன் மனதில் ஒருவித எண்ணம் எழுந்தது. அதாவது, நாம் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்து வாழ வேண்டும். அதற்காக அவன் பலவாறு யோசித்தான்.




அப்போது அந்த ஊர் மக்கள் அந்த ஊருக்கு வந்திருக்கும் துறவியைப் பற்றி பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு, அவரைக் காணச் சென்றான்.

அந்த ஜென் துறவி மிகவும் சக்தி வாய்ந்தவர். அவருக்கு கடவுளின் அருள் முழுவதும் கிடைத்ததால், அவர் எது சொன்னாலும் நடக்கும்.

அத்தகையவரிடம் அவன் சந்தித்து, வரம் ஒன்றை வாங்கிக் கொண்டு சென்றான்.

“அவன் எப்போதும் பலமிக்கவனாக, அவன் நினைப்பது எல்லாம் நடக்கக்கூடியதான ஒரு வரம்” வேண்டி கேட்டுக் கொண்டான். துறவியும் அவனுக்கு அவன் ஆசைப்படியே வரத்தையும் கொடுத்தார்.

அப்போது அவன் ஒரு நாள் ஒரு பெரிய வியாபாரியின் வீட்டிற்கு சென்றான்.

அந்த வியாபாரியின் செல்வாக்கை கண்டு, நானும் ஒரு பெரிய வியாபாரி ஆக வேண்டும் என்று நினைத்தான்.
உடனே அவனும் ஒரு பெரிய வியாபாரியாக மாறிவிட்டான்.

மற்றொரு நாள் ஒரு அரசாங்க அதிகாரியைக் கண்டான். அப்போது அந்த அதிகாரியைப் பார்த்ததும், பணக்கார வியாபாரிகள் முதல் அனைவரும் பயப்படுவதைக் கண்டான். ஆகவே அதிகாரியாக வேண்டும் என்று நினைத்தான். அதிகாரியும் ஆனான்.

பின் அவன் அதிகாரியாக வெளியே வெயிலில் செல்லும் போது சூரியனின் வெப்பத்தை அவனால் தாங்க முடியவில்லை. ஆகவே சூரியன் மிகவும் சக்தி வாய்ந்தது என்று எண்ணி சூரியனாக மாறினான்.

சூரியனாக மாறிய பின் மேகம் சூரியனை மறைத்ததால், மேகமாக மாற ஆசைப்பட்டான்.

மேகமாக மாறியதும் காற்று வீசும் போது மேகம் கலைந்தது, எனவே மேகத்தை விட காற்று பலமிக்கது என்று காற்றாக மாறினான்.

காற்றாக இருக்கும் போது, மலையை காற்றால் அசைக்க முடியவில்லை, ஆகவே மலையே சிறந்தது என்று மலையாக மாறினான்.

மலையாக மாறிய பின் மலையின் சிறு பகுதி உடைந்து விழுந்தது. எப்படியென்று பார்த்தால், அங்கு ஒரு கல்லுடைக்கும் தொழிலாளி தன் உளியால் மலையின் சிறு பகுதியை உடைத்தான்.

ஆகவே மலையை விட கல்லுடைக்கும் தொழிலாளியே சிறந்தது என்று நினைத்து, இறுதியில் பழைய தொழிலான கல்லுடைக்கும் தொழிலாளியாகவே மாறிவிட்டான்.

இந்த கதையிலிருந்து தெரிகின்றது, நமது மனம் அலைபாயக் கூடியது. மனதை ஒருமைப்படுத்தினால் சந்தோஷம் கிடைக்கும்.

எனவே, மனதைப் போற்றி, அதன் தூய்மையைக் காத்து ஆற்றலைப்பெருக்கி அதன் நுட்பத்தை அறிய ஆர்வம் கொள்ளுங்கள். "மனவளக்கலை" பயிற்சி தான் உலகுக்கு அமைதி ஊட்டவல்லது.

## மனதை ஒடுக்கும் பயிற்சி

"அகத்தவத்தால் மனச்சுழலைப் படிப்படியாய்க் குறைத்து,
ஆதிநிலை ஒன்றுவரை பழக்கமாக்கிக் கொண்டால்
இகத்துணர்வோ டெல்லையிலா இறைநிலையும் உணர
ஏற்றபடி அவ்வப்போ பொருந்திவரக் காண்போம்.
மிகத்தெளிவும் உள்ளுணர்வும் முற்றறிவும் கிட்டும்.
மூலம்எனும் இறைமுதலாய் மனிதன்வரை வந்த
மகத்துவமாம், முத்தரமே முத்திறமாய் மலர்ந்த
மறைபொருளை அறிவுணரும். பிரம்மஞானம் கிட்டும்"
(ஞாக.பா.1446)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 22.அகத்தவமும் அற வாழ்வாகும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ரஷ்யாவில் மூன்று குருமார்கள் திடீரென மக்களிடையே பிரபலம் ஆயினர். ரஷ்யாவின் புகழ்பெற்ற மதகுருவுக்கு அந்த மூன்று துறவிகள் மீதும் பொறாமையும் கோபமும் ஏற்பட்டது.



அவர் அந்த மூன்று துறவிகளையும் பார்ப்பதற்காக அவர்கள் வசிக்கும்

கிராமத்திற்கு படகில் சென்றார்.

அந்தத் துறவிகள் வசித்த கிராமம் ஒரு ஏரியின் கரையில் இருந்தது. ஏரியைக் கடந்து கரையில் இறங்கினார் மதகுரு.

திடீர் பிரபலமடைந்த மூன்று துறவிகளும் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்திருந்தனர்.

குடியானவர்களைப் போல எளிமையாக அவர்கள் இருந்தனர். மதகுருவைப் பார்த்தவுடன் எழுந்து பயபக்தியுடன் அவரது காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்கள்.

இதைக் கண்டு மதகுருவுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

“இவர்கள் நான் நினைத்து வந்தது போல அபாயகரமானவர்கள் அல்ல. இவர்களைத் திருத்திவிடலாம்.” என்று எண்ணி அவர்கள் எப்படி துறவிகளாக மாறினார்கள் என்று கேட்டார்.

“எங்களுக்குத் தெரியாது. எங்களைத் துறவிகள் என்று சொல்ல முடியுமா? என்றும் தெரியவில்லை.

மக்கள் எங்களை அப்படி அழைக்கிறார்கள். நாங்கள் துறவிகள் அல்ல, எங்களை அப்படி அழைக்க வேண்டாம் என்றுதான் அவர்களிடம் சொல்கிறோம்.

நாங்கள் அவர்களிடம் சொல்லச் சொல்ல அவர்கள் எங்களைக் கூடுதலாக வழிபடுகிறார்கள். அதனால் நாங்கள் அவர்களிடம் பேசுவதைக்கூட விட்டுவிட்டோம்” என்றனர்.

மதகுரு மேலும் சந்தோஷமடைந்தார்.
“உங்களது பிரார்த்தனை என்ன? எப்படி பிரார்த்தனை செய்வது என்று தெரியுமா?” என்று கேட்டார்.

மூன்று பேரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

“உண்மையிலேயே சொல்ல வேண்டுமெனில், எங்களுக்கு எந்தப் பிரார்த்தனையும் செய்யத் தெரியாது. சொல்வதற்கே சங்கடமாக இருக்கிறது. ஆனாலும் நீங்கள் கேட்பதால் சொல்கிறோம். நாங்களே ஒரு பிரார்த்தனை ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறோம்.

தந்தை, மகன் மற்றும் தூய ஆவியாக ஒரே கடவுள் இருக்கிறார் என்று எங்களுக்கு சொல்லப்பட்டது. நாங்கள் மூன்று பேராக உள்ளோம். கடவுளும் மூன்றாக உள்ளார்.

அதை வைத்து நாங்கள் ஒரு பிரார்த்தனை மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கினோம். ‘நீங்களும் மூவர். நாங்களும் மூவர். எங்கள் மீது கருணை காண்பியும். இதுவே எங்கள் பிரார்த்தனை” என்றனர்.

அந்த மதகுரு அந்த மூன்று பேரையும் பார்த்து எரிச்சல் அடைந்தார்.

“இது என்ன முட்டாள்தனம். இது ஒரு பிரார்த்தனையா? நான் உங்களுக்கு சரியான பிரார்த்தனை முறையைச் சொல்லித் தருகிறேன்” என்றார்.

அவர்களும் அவரிடம் திரும்பத் திரும்ப மூன்று முறை கேட்டு பிரார்த்தனையைக் கற்றுக் கொண்டனர்.

மதகுரு மிகவும் திருப்தியாக தனது படகில் ஏறினார். ஏரியின் நடுவில் அவர் ஒரு காட்சியைக் கண்டார்.

படகோட்டியின் கண்களிலும் வியப்பு. அவரிடம் பிரார்த்தனையைக் கற்றுக்கொண்ட மூன்று பேரும் தண்ணீரின் மேல் படகை நோக்கி ஓடிவந்தனர்.

மதகுருவின் படகு நின்றது.

அவர்கள் மதகுருவிடம், “தயவுசெய்து எங்களுக்கு உங்கள் ஜெபத்தை இன்னும் ஒரே ஒரு முறை கற்றுக்கொடுங்கள். எங்களுக்கு மறந்து போய்விட்டது” என்று கேட்டனர்.

மதகுரு வியப்பில் ஆழ்ந்தார். அவர் அந்த மூன்று மனிதர்களின் பாதம் தொட்டு வணங்கினார்.

“நான் என்ன சொல்லிக் கொடுத்தேனோ தயவு செய்து அதை மறந்துவிடுங்கள். உங்கள் பிரார்த்தனை ஏற்கெனவே கேட்கப்பட்டுவிட்டது.

எனது பிரார்த்தனைதான் இதுவரை கேட்கப்படவேயில்லை. நீங்கள் உங்கள் முறையிலேயே கடவுளைத் தொழுங்கள். என்னை மன்னியுங்கள்” என்றார்.

“மனதைப் பற்றி தெரிந்து கொண்டால் பிரபஞ்ச இரகசியங்கள் விளங்கிவிடும்” என்பார் வேதாத்திரி மகரிஷி.

“மறைபொருளாம் அறிவு சிவம் இரண்டும் ஒன்றாய் நானாய்
மனிதன் தெய்வமாய்த் திகழும் மாபதம் பேறானால்,
இறையுணர்வால் தன்முனைப்புப் பேரறிவாய் மாறும்.
எப்போதும் ஈசன் குரல் உள்ளுணர்வாய்க் கேட்கும்;
குறையறிவில் பொருட்கள், புகழ், புலன், இன்பம், இவற்றில்
கொடிய வறுமை பெருகும். நிறைவு கிட்டா வாழ்வில்.
நிறைநிலையை எவரெனினும் முயற்சித்தால் பெறலாம்.
நேர்வழியோ அகத்தவமும் நிறைஅற வாழ்வாகும்”. (ஞாக.பா.1671)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 23. சிந்தை அடங்கிடும் சீவனே சிவனாகும்
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

டோக்குவா காலத்தில், ஜியன் என்ற புகழ்பெற்ற சமஸ்கிருத பண்டிதர் ஒருவர் இருந்தார்.

அவர், இளம் வயதில்- அவர் தன் சக நண்பர்களுக்கு, சொற்பொழிவு செய்வது வழக்கம்.

இதைக் கேள்விப்பட்ட அவருடைய தாயார், அவருக்கு ஒரு கடிதம் எழுதினாள்.



"மகனே, நீ ஒரு புத்தரின் சீடனாக ஆகமாட்டாய் என்றே கருதுகிறேன். ஏனென்றால், மற்றவர்களுக்காக நீ ஒரு நடமாடும் அகராதியாக இருக்க விரும்புகிறாய்.

நன்றாக ஞாபகம் வைத்துக்கொள். புகழ், பெருமை, மற்றும் பல தகவல்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுதல் போன்றவைகளுக்கு முடிவே கிடையாது.

இப்படி நீ பிறருக்கு ஒரு தகவல் ஒலிபரப்பாக இருப்பதை நான் விரும்பவில்லை. இதை நீ உடனே நிறுத்த வேண்டும்.

ஒரு மலையின் ஒதுக்குப்புறமாக, ஒரு சிறிய கோயில் அமைத்து. அதற்குள் நீ தங்கிக் கொண்டு, தியானத்தில் ஈடுபட வேண்டும் என்பதையே நான் விரும்புகிறேன்.

அப்பொழுதுதான் நீ உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்."

"ஐந்து புலன்களையும் அடக்கி, புருவத்திடையே
அறிவினது மூலத்தை ஆழ்ந்து நோக்கி அமர,
சிந்தை அடங்கிடும் சீவனே சிவனாகும்.
சிறுகச் சிறுகப் பயின்றால், சித்திக்கும் உண்மைநெறி." (ஞா.க.பா.1463)

விஷய ஞானம் விபரீதமானது. அது ஒரு மனச் சுமை. எவ்வளவு சீக்கிரம், நீங்கள் அதிலிருந்து விடுதலையாகிறீர்களோ. அவ்வளவு சீக்கிரம். நீங்கள் ஆத்மிக ஞானத்தை நோக்கிச் செல்லுவிர்கள்.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 24. அறிவாளி யார்?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

அந்த நாட்டின் அரசனும், அமைச்சரும் பேசிக்கொண்டிருந்தனர்.

"அமைச்சரே! அந்த ஜென் துறவியிடம் ஏதோ மாயக் கண்ணாடி இருக்கிறதாம். அதுபற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்று அமைச்சரைப் பார்த்து கேட்டார் அரசர்.

அமைச்சரும், "ஆமாம், அரசே! அக்கண்ணாடியிடம் நாம் என்ன கேள்வி கேட்டாலும் சரியான பதிலைச் சொல்லி விடுமாம்" என்று கண்ணாடியின் பெருமையைச் சொன்னார்.

உடனே அரசர், "அப்படியானால் அந்தக் கண்ணாடி எனக்கு வேண்டும்" என்றார்.

அமைச்சரும், "நீங்கள் இந்த நாட்டின் அரசர், நீங்கள் கேட்டால் அந்தத் துறவி மறுக்க மாட்டார்" என்றார்.

அரசனும், துறவியைக் காண புறப்பட்டார்.

அரசனைக் கண்ட துறவிக்கு, அவரது விருப்பம் புரிந்தது. அரசனிடம், "சரி, ஆசைப்படுகிறாய். இந்தக் கண்ணாடியை நீயே எடுத்துக் கொள்" என்று கண்ணாடியை கொடுத்தார்.

கண்ணாடியுடன் அரண்மனை திரும்பிய அரசன், அதனிடம் கேள்வி கேட்டார்.

"இந்த உலகத்திலேயே மிகவும் சிறந்த அறிவாளி யார்?"

உடனே கண்ணாடி, “எவன் ஒருவன் தனக்கு எதுவுமே முழுவதுமாகத் தெரியாதென்று நினைக்கிறானோ அவன்தான் புத்திசாலி” என்றது.

அரசன் அதன் பதிலைக் கேட்டு, “என்ன தவறாகச் சொல்கிறாய்? எதுவுமே தெரியாதென்று நினைக்கிறவன் எப்படி அறிவாளியாக இருக்க முடியும்?” என்று குழம்பினார்.

குழம்பிப் போன அரசன், ஜென் துறவியை சந்தித்து, மாயக்கண்ணாடி குறித்து, “தப்புத் தப்பாக பதில் சொல்லும் இந்தக் கண்ணாடியை தூக்கி எறிய வேண்டியதுதானே?” என்று குறை கூறினார்.

அதற்கு துறவி, “எல்லாம் எனக்கு தெரியும் என்று முடிவு செய்துவிட்டால், உனது அறிவு விசாலப்படாது. தெரிந்த விஷயத்தைக் கூட நுணுக்கமாக ஆராய்ந்தால் மேலும் பல விஷயங்களை புரிந்து கொள்ளலாம். மேலும், மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே ஒரு மனிதனை சிறந்த அறிவாளியாக்கும்” என்றார்.

துறவியின் விளக்கத்தைக் கேட்ட அரசர், “ஆமாம்! துறவியே நீங்கள் சொல்வது சரிதான்” என்றவாறு குழப்பம் நீங்கி தெளிவு பெற்றார்.

எண்ணமே ஒரு மனிதனை சிறந்த அறிவாளியாக்கும்.
வேதாத்திரியம் சொல்கிறது .......

“எண்ணமே எக்காலத்திற்கும் வாழ்க்கையின் சிற்பி,
எண்ணி எண்ணிட இனிதே பயக்கும்.” (மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து பா.பக்.4)

வேதாத்திரியஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 25. விளக்க முடியாத ஞானம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு அரசன் மகாயான புத்தமதத்தில் உள்ள நூல்களில் ஒன்றைப் படித்தான். அதிலிருந்த விஷயங்களை விளக்கமாகத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

அவனுக்கு நெருங்கிய நண்பர்கள், ஒரு ஊரில் இருந்த ஜென் குருவை சந்தித்தால் விளக்கம் கிடைக்கும் என்றார்கள்.

அரசர் உடனடியாக தனது அமைச்சர்களை அனுப்பி அந்த ஜென் குருவை அழைத்து வருமாறு கூறினார்.

குருவை சந்தித்த அமைச்சர்கள் மன்னரின் ஆசையைக் கூறினார்கள்.

தான் ஒரு குறிப்பிட்ட நாளில் வருவதாக அவர் சொல்லி அனுப்பினார்.

அவர் கூறிய நாளில் அனைவரும் ஓரிடத்தில் மேடை அமைத்து, ஆவலாக காத்திருந்தார்கள்.

குறித்த நேரத்தில் சரியாக வந்தார். அங்கிருந்த அனைவரையும் வணங்கினார்.

அவருக்கென்று தனியாக அமைக்கப்பட்டிருந்த மேடையின் மீது ஏறினார்.

அங்கிருந்த மேஜையைப் பலமாக ஒருமுறை தட்டினார். இறங்கி ஒரு வார்த்தைகூடப் பேசாமல் திரும்பிச் சென்றுவிட்டார்.

வேதாத்திரியம் சொல்கிறது.......

"ஞானம் என்றால் மனஇயக்க இயல்பறிந்து
   நான்என்ற இயற்கைத் தத்துவம் உணர்ந்து,
மோனமென்ற ஒன்றாயும், மோகமாதி
   மூவிரண்டு குணங்களாய்ப் பரிணா மத்தால்
ஆனபொருள் அனைத்திலும், தான் அறிந்து நிற்கும்

அளவாயும் அமையும் அறிவெல்லை கண்டு
மானம், மரியாதை, உடல் ஒழுக்கம் காத்து,
மனிதரிடை மனிதராய் வாழ்தல் ஆகும்." (ஞாக.பா.1387)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 26. ஞானம் தேடும் பக்தர்கள்.

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

சீனாவில் புகழ் பெற்ற ஜென் ஞானி ஒருவர் இருந்தார்.

ஞானம் பெற விரும்பிய இளைஞன் ஒருவன் அவரிடம் வந்தான்.

அவரைப் பணிவாக வணங்கிய அவன் "ஞானம் என்ற நன்மருந்து உங்களிடம் இருப்பதாக அறிந்தேன். அந்த மருந்தை தந்தால் நானும் ஞானம் பெறுவேன்" என்றான்.

அவனை மேலும் கீழும் பார்த்த அவர் "நீ ஞானத்தை விலைக்குக் கேட்கிறாயா?

இனாமாகக் கேட்கிறாயா?

விலைக்குக் கேட்பதாக வைத்துக் கொண்டால் என்னால் ஞானத்தை விற்க முடியாது. ஏனென்றால் அதற்கான விலையை உன்னால் தர முடியாது.

இனாமாக உனக்கு ஞானத்தைத் தர மாட்டேன்.

இனாமாகக் கிடைக்கும் ஞானத்தை நீ மதிக்க மாட்டாய்.

உனக்கு சொல்லும் அறிவுரை இதுதான்.

நீயே முயன்று கல்வி என்னும் கடலுள் மூழ்கி எப்படியாவது ஞான முத்துகளை எடுக்க வேண்டும். வேறு வழி இல்லை” என்றார்.

ஞானம் தேடும் பக்தர்களுக்கு என்ன சொல்கிறது வேதாத்திரியம்?

“தேடுகின்ற பொருள் என்ன? ஏன்? நமக்குத்
தெரிந்தவர் யார்? கிடைக்குமிடம் எது? ஈதெல்லாம்
நாடுகின்ற வழக்கம் சிலபேரே கொள்வார்.
ஞானமதைத் தேடும் சிலர், இதை மறந்து
ஓடுகின்றார். உருக்கமுடன் தேடுகின்றார்.
ஒடுங்கிநின்று அறியும் இதை விரிந்து காணார்!
வாடுகின்றார். உளம்நொந்து, இருளைத்தேட
விளக்கெடுத்துப் போவதைப்போல, முரண் பாடன்றோ?”
(ஞா.க.பா.1438)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 27. வழியும் கோப்பை.

(ஜென்னும் வேதாத்திரியமும்)

நான்-இன் என்ற ஜப்பானிய ஜென் ஆசிரியர் வாழ்ந்த காலம் 18 ஆம் நூற்றாண்டாகும்.

அக்காலத்தில் பிரபலமான ஒரு பல்கலைக் கழத்திலிருந்து ஒரு பேராசிரியர் ஒருவர் நான்.இன் அவர்களைக் காண வந்தார்.

வந்தவரை சம்பிராதப்படி வரவேற்று உபசரித்து கருத்து பரிமாற்றம் செய்து கொண்டிருந்தனர்.

நான்.இன் அவர்கள் பேச்சின் நடுவே தேநீர் வழங்க ஆரம்பித்தார். பேச்சின் ஒரு கட்டத்தில், பேராசிரியர்- தான் ஜென் குறித்து கற்க

விரும்புவதாகக் கூறினார்.

கெட்டிலில் இருந்து பேராசிரியரின் கோப்பையில் தேநீர் ஊற்றத் தொடங்கிய ஜென் ஆசிரியர், கோப்பை நிரம்பி வழிந்தபோதும் கூட - ஊற்றுவதை நிறுத்தவில்லை. மிகுந்த தேநீர் வழிந்தோடி வீணானது.

இதுகண்டு பேராசிரியர், ஐயா தேநீர் வீணாகிறது. ஊற்றுவதை நிறுத்தும் என்றார்.

நான்.இன் அவர்கள் சொன்னார்.

ஐயா உங்கள் மனநிலை இந்தக் கோப்பையைப் போன்றது. உங்கள் சிந்தனை பதிந்து போன நம்பிக்கைகள், காலம் காலமாய் வளர்ந்துவிட்ட ஊகங்கள் ஆகியவற்றால் நிரம்பியுள்ளது.

நிரம்பிய கோப்பையில் ஊற்றிய தேநீர் வழிந்தோடி வீணாவதைப் போல், இப்போது எந்தப் புதிய அறிவும் உங்களுக்குப் பயன்படாது.

உம்முடைய எண்ணம் என்ற கோப்பையை காலி செய்து கொண்டு வாரும் என்று கூறி அனுப்பினார்.

இதைத்தான் வேதாத்திரியம் சொல்கிறது....

எண்ணத்தின் குறைபாடே, மீண்டும் மீண்டும்
    எண்ணமாய் எழுந்த அதை முடிக்க, மீற,
எண்ணமது அமைதியற்று, நிலை பிறழ்ந்து,
    எழும் வேகம் சூழ்நிலைகட் கேற்ற வாறு,
எண்ணமே பேராசை, கவலை, வஞ்சம்,
    இழுக்கான் கடும்பற்று, பொறாமை யாகும்.
எண்ணம் இவ்விதம் மாறி, செயலாய் ஆற்ற
    எழும் விளைவே, ஐந்து பெரும் பழிச்செயல்கள்!" (ஞாக.பா.1537)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 28. போரை நிறுத்திய புத்தர்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ரோகினி நதியின் ஓரம் ஒரு சமயம் புத்தர் வந்து கொண்டிருந்தார்.

அங்கு ரோகினி நதியின் நீருக்கு கோலியர்களும் சாக்கியர்களும் தத்தமக்கு உரிமை கொண்டாடினார்கள்.


இரண்டு குழுக்களிடையேயும் வாதம் முற்றியது. பிரச்சனை சிக்கலாக உருவானது.

இரண்டு குழுக்களுமே நேருக்கு நேர் மோதும் சூழ்நிலை உருவாயிற்று.

இதனையெல்லாம் புத்தர் அமைதியாகப் பார்த்து கொண்டிருந்தார்.

இரு தரப்பினரையும் சாந்த முகத்துடன் நோக்கிய புத்தர் அவர்களை நோக்கி அன்பு வார்த்தைகளைக் கூறத் தொடங்கினார்.

“இந்த ரோகிணி நதியின் தண்ணீருக்கு என்று தனியாக ஏதும் மதிப்புள்ளதா? அல்லது இந்த தண்ணீரால் உங்கள் மக்களுக்கு நன்மைகள் வருகிறதா?” என்று கேட்டார்.



”மக்களுக்கு நன்மை செய்யும்வரை தான்நதி நீர் பயனுள்ளது” என்று இரு தரப்பினருமே தெரிவித்தனர்...

“இதைக் கேட்ட புத்தர் “நீருக்காக நீங்கள் போரிட்டால் உங்கள் குடிகளில் எத்தனையோ

மக்கள் உயிரிழக்க நேரிடும். இப்போது சொல்லுங்கள்.

நதிநீர் பெரியதா?

இந்த நீரை யாருக்காக பயன்படக் கருதுகிறீர்களோ அந்த மக்களின் உயிர் பெரிதா?

நீங்கள் இரண்டு தரப்பினரும் முடிவு செய்து கொள்ளுங்கள்” என்று புத்தர் கூறிவிட்டு வெளியே சென்று விட்டார்.

போரிடுவதற்காகத் தயாராக இருந்த இரண்டு பிரிவனருக்குமே புத்தரின் போதனை அமைதியை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கியது.

மகானின் உண்மையை உணர்ந்து கொண்டனர். இரு குழுக்களுமே அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டனர்.

ஒரு மாபெரும் போரினைத் தடுத்த புத்தரின் ஆற்றல் கண்டு மக்கள் வியந்தனர்.

உலகப் போர்களை நிறுத்த, உலக நல வேட்பு வேண்டும் என்று வேதாத்திரியம் சொல்கிறது.

## போரில்லா நல்லுலகம்:

“உலகமென்ற மண்மீது அனைவரும் பிறந்தோம்,
    உயிர்காக்கும் காற்று ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளி வீசும் சூரியனும் ஒன்றே
    உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய
உலகில் இன்று உள்ளோர் இதிலொன்றும் செய்ததில்லை
    ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப் போவார்.

உலகில் ஒரு குழுவினர் மற்றவரைக் கொன்று
உயிர் வாழ்தல் நீதியெனில் கொலைஞர்களே மிச்சம்." (ஞாக.பா1780)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 29. தெளிவு குருவார்த்தைக் கேட்டல். (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஆசிரமத்தில் ஜென் குருவும் பல சீடர்களும் வாழ்ந்து வந்தனர்.

ஒரு சீடனை அழைத்த, அவர் ஒரு வாளியைக் கொடுத்து அதில் தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னார்.

அவனும் சென்று தண்ணீர் நிரப்பினார். மீதமிருந்த தண்ணீரை தரையில் ஊற்றினான்.

அதைக் கண்ட குரு கோபமாக, "மீதமிருந்த தண்ணீரை ஏன் தரையில் ஊற்றினாய்? அதை செடிகளுக்கு ஊற்றியிருக்கலாமே?

இங்கு ஒரு துளி நீரைக்கூட வீணாக்கக் கூடாது. இனிமேல் அப்படிச் செய்தால் அவ்வளவுதான்" என்று சொன்னார்.

அந்தச் சீடன் அதற்குப் பின் தன்னுடைய பெயரையே ஒரு துளி நீர் என்று பொருள் வரும்படி மாற்றிக் கொண்டான்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருஉரு சிந்தித்தல்தானே"

என்பது திருமந்திரம்.

குருவின் தொடர்பு குறித்து வேதாத்திரியம் சொல்கிறது.

"செய்தொழில்களில் கடமை உணர்வு பெற்றேன்.

சிந்தனையில் ஆழ்ந்துபல விளக்கம் கண்டேன்." (ஞாக.பா.9)

வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 30. பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகிவிடும். (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குருவிடம் ஒரு சீடர், நான் உங்களுக்காக ஒன்றும் கொண்டு வரவில்லை என்பதில் வருத்தம்" என்றார்.

ஆச்சார்யார்.. "அதை எறிந்துவிடு."

மாணவர் நான் ஒன்றும் கொண்டு வராதபோது எதை எறிவது?

ஆச்சார்யார். "அப்படியானால் அதைக் கொண்டு போய்விடு."

சீடர் உருவங்களின் மீது பற்றைவிட வேண்டும் என்பது ஆச்சாரியரின் எண்ணம்.

வேதாத்திரியம் சொல்கிறது.......

"நெற்றியில் உச்சியில் ஞாபகமாயிரு,
உற்றுற்றுப் பார்த்திடு உன்னை உலகை பின்,

கற்றபடி நட கருத்து விழிப்புடன்.
பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகி விடும்." (ஞாக.பா.426)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 31. உனையறியும் சாவி எது?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜாஜென் பயிற்சியில் மூச்சுக் கட்டுப்பாடு மிக முக்கியம். ஆசனத்தில் நன்கு அமர்ந்த பின் நீண்ட மூச்சு இழுத்து வாய் வழியே விட வேண்டும்.

மூச்சு சீராகும் வரை இவ்வாறு பலமுறை செய்ய வேண்டும். இதனால் மூச்சுக் கட்டுப்படுகிறது.

இப்பயிற்சியால் மனம் மூச்சைப் பின் தொடருகிறது. மூச்சை உள் இழுக்கும் போது மனம் அகவுலகிற்கு வருகிறது.

மூச்சை வெளிவிடும்போது மனம் புறவுலகிற்குச் செல்கிறது.

அகவுலகமும் புற உலகமும் அளவிற்கு உட்படாதவை. உண்மையில் ஒர் உலகம்தான் உள்ளது, அளவு கடந்த இவ்வுலகில் சுவாசக் குழாய் ஒரு கதவைப் போன்றது.

"நான் சுவாசிக்கிறேன்" என்று கூறும்போது அங்கு "நான்" என்பது கற்பிக்கப்பட்ட ஒன்றாகும். ஒருவன் சுவாசிக்கும்போது இந்த "நான்" கதவு போல் திறந்து மூடுகிறது,

சுவாசத்தை நன்றாகக் கவனித்து மனம் தூய்மையும் சஞ்சலமற்ற தன்மையும் அடைந்தால் அங்கு "நான்" இருக்காது. உடல், மனம். உலகம் எதுவும் இருக்காது.

சீரான ஆசனத்தில் அமர்வதும், மூச்சையும் மனதையும் கட்டுப்படுத்துவதும் மட்டுமே ஜென்பயிற்சி என்று பலர் தவறாக எண்ணுகிறார்கள்.

மாறாக, ஆசனம் மற்றும் மூச்சுக் கட்டுபாட்டின் மூலம் ஜென் சாதகர்கள் காலத்தையும் இடத்தையும் கடந்து தங்களை முற்றிலும் மறக்க முற்படுகிறார்கள் என்பதே உண்மை.

சுவாசமும் ஞானமும் என்பது பற்றி வேதாத்திரியம் சொல்கிறது......

"இடகலையும், பிங்கலையும் மாற்றி மாற்றி
இழுத்தழுத்தி விட்டதனால் என்ன கண்டீர்?
விடக்கலையே ஆச்சுதிந்தவிதப் பழக்கம்
வீணாச்சு காலமும் உன் உடலின் நன்மை
அடக்கநிலை அறிவுக்கு அறிவேயாகும்.
அதற்கு இடம் உனது இருபுருவமையம்
தொடக்குருவால் அவ்விடத்தே தோன்றும்காட்சி
சுய அறிவால் உனையறியும் சாவியாகும்."
(ஞாக.பா.1443)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 32. இயற்கை என்ற போரட்டக்காரன்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவியான சேக்யோ (1118-1190) தனது வாழ்வின் செம்பாகத்தை அலைந்து திரிவதிலேயே கழித்தவர்.

தனது நாடோடிப் பயணத்தில் அப்படி ஒரு நாள் மாலை நேரம் மலை மீதிருந்த ஒரு எளிய குடிசையின் முன் வந்து நின்றார்.

அதில் முதிய தம்பதியர் இருந்தனர். அன்றிரவு தங்குவதற்கு அவர்களிடம் இடம் கோரினார் சேக்யோ.




கூரையில் பெரிய ஓட்டை ஒன்று இருப்பதைச் சுட்டிக் காட்டிய கணவர், தமது வீட்டின் அரைகுறையான உபசரிப்பு ஒரு விருந்தாளிக்கு ஏற்றதன்று எனச் சொல்லி மறுத்தார்.

சேக்யோ ஒரு ஜென் ஞானி என்பதால் அவருக்கு அடைக்கலம் தந்தாக வேண்டும் என்று மனைவி கூறினார்.

“கூரையில் உள்ள ஓட்டையை ஏன் நீங்கள் செப்பணிடக் கூடாது?” என்று கேட்டார் சேக்யோ.

அந்தக் கணவர் விளக்கினார்: “அது அத்தனை எளிதல்ல நண்பரே! இப்போது ஆண்டின் மூன்றாம் பருவம். இலைகள் உதிர்கின்றன. லேசாக மழை பெய்கிறது. கூரை ஓட்டையின் வழியாக நிலவின் ஒளி வீட்டிற்குள் விழுவதை என் மனைவி மிகவும் ரசிக்கிறாள். எனக்கோ அவ்வப்போது கூரை மீது பெய்யும் மழையின் சப்தம் பிடித்திருக்கிறது.

எனவே, ஓட்டையை அடைக்க வேண்டாம் என்கிறாள் அவள், அடைத்துவிட வேண்டும் என்கிறேன் நான்.”

வீட்டை மராமத்து செய்வதில் மரபிற்கு மாற்றமான இந்த கண்ணோட்டத்தை சேக்யோ ஏற்றுக்கொண்டார்.

அப்போது அந்த முதிய கணவர் சொன்னார்: “எமது எளிய குடிசை – வேயப்பட வேண்டுமா? வேண்டாமா?”

இதைக் கேட்டதும், “அடடா! அற்புதமான கவிதை ஒன்று உருவாகிறது!” என்றார்.

“நீங்களே அதை முழுமைப் படுத்துங்கள் துறவியே! அப்படியானால் நிலைமை எதுவாயினும் இன்றிரவு நீங்கள் இங்கே தங்கலாம்” என்றார் அந்த முதிய மனைவி.

சேக்யோ அந்தக் கவிதையை இப்படி முழுமை செய்தார்:

“நிலவொளி வழிந்து வர வேண்டுமா?
மழைத்துளி தெறித்து விழ வேண்டுமா?
எமது சிந்தனைகள் பிளவுபட்டுள்ளன.
எமது எளிய குடிசை
வேயப்பட வேண்டுமா? வேண்டாமா?”
எத்தகைய இனிய தயக்கம்! எத்தனை கனிவான மனநிலை!
“காயமே உன்னுள் ஒளி நுழையும் வாசல்”

என்கிறார் மௌலானா ரூமி.

கூரையில் விழுந்த ஓட்டையை இரண்டு விதமாகவும் பார்க்கலாம். காயம் என்று பார்த்தால் அதைச் சரி செய்ய வேண்டும்.

வாசல் அல்லது இயற்கையே உண்டாக்கிய ஜன்னல் என்று பார்த்தால் அது ஏற்கனவே சரியாகத்தான் இருக்கிறது! அப்படியே விட்டுவிடலாம். அப்போதுதான் ஒளி நுழையும்.

இயற்கையுடன் இயன்றவரை ஒத்திசைந்து வாழ்வதை இந்தச் சிறிய நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது.

இயற்கையில் பழுதுகள் இல்லை. இயற்கையைக் கைப்பற்றுவது, வெல்வது போன்ற அபத்தமான கண்ணோட்டங்களால் மனிதர்கள்தாம் பழுதுகளை உண்டாக்குகின்றனர்.

கூரையில் விழுந்த ஓட்டை இயற்கையாக உண்டான ஒன்று. மழையே கூட அதனை உண்டாக்கியிருக்கலாம். அல்லது ஒரு வலிய காற்று அதனை உண்டாக்கியிருக்கக் கூடும்.

எப்படியோ, அது பழுது அன்று. எனவேதான் அதனை அடைப்பதில் அந்த முதியவருக்கு ஒரு தயக்கம் வந்துவிட்டது.

இயற்கையே ஒப்புதல் தராமல் அதனை அடைக்க முடியாது, கூடாது. அதற்காக காத்திருக்கிறார்.

இயற்கை சொல்லும் தீர்வு போல் வந்து சேர்கிறார் சேக்யோ. ஆனால் அவரும்கூட இந்தக் கவிதையில் ஒரு தீர்வைச் சொல்லவில்லை. ஏனெனில், மழையும் தேவைப்படுகிறது, ஒளியும் தேவைப்படுகிறது.

பல நூற்றாண்டுகள் கடந்தும் அந்தக் குடிசை வேயப்படவில்லை. அந்த முதியவரின் தயக்கம் இனிமை மாறாமல் அப்படியேதான் இருக்கிறது!

வேயப்பட்ட கூரையில்தானே அந்த ஓட்டையே விழுந்தது? அதுதான் செய்தி. மனிதன் வேயும் ஒவ்வொன்றிலும் இயற்கை ஓட்டை போட்டுக்கொண்டே இருக்கும். இயற்கையின் மர்மத்தை முழுமையாக நாம் விளங்கிவிட முடியாது!

இந்த முழுப் பிரபஞ்சமுமே சேக்யோ அடைக்கலம் தேடி வந்த குடிசைதான்.

“ஒவ்வொரு கணமும் ஓட்டையும் விழுகிறது வேயவும் படுகிறது”

“இயற்கை என்ற போரட்டக் காரனுக்கு என்றும்
எல்லாச் சீவன்களுமே எடுத்தாடும் காய்கள்.
பெயர்த்து இடம் மாற்றிவைப்பான் பிய்த் தெறிவான் அருள்வான்
பிழையென்று தீர்ப்பளிக்கப் பிறந்தோர்யார்? பேருலகில்!”
(ஞாக.பா.1060)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 33.கர்மயோகமா? தியானமா?
# (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குருவிடம் ஒருவன் வந்து, 'எப்படி தியானத்தில் ஈடுபடுவது?' என்று கேட்டான்.

'என்னைப் பார்த்துக் கொண்டிரு. தியானம் உனக்குக் கைவரும்' என்றார் ஜென். அவனும் சம்மதித்தான்.

காலையில் குரு எழுந்தார். குளித்தார். பகல் முழுவதும் தோட்ட வேலையில் ஈடுபட்டார். உணவு வேளையில் உண்டார்.

ஆனால் வழிபாடு, பிரார்த்தனை, தியானித்தல், படித்தல் என்றெல்லாம் செய்யவில்லை.

இதில் மனம் சலித்த சீடன், 'எப்போது நான் தியானம் கற்பது?' என்றான்.

'நான் குழி வெட்டியதும் தியானம்தான். தோட்டம் போட்டதும் தியானம்தான். உணவு உண்டதும் தியானம்தான். எனது வாழ்வே தியானம்தான். எனது வாழ்வில், தியானம் என்ற ஒன்று தனியாக இல்லை' என்று சிரித்தபடி சொன்னார் ஜென் குரு.

## கர்மயோகம் – வேதாத்திரியம்

அறிவறிந்த விளக்கத்தால் அன்பு பொங்கி,
    அனைத்துலக மக்களும் ஒரு குடும்பமாக,
அறிவை இறை யாயுணர்ந்து, அறவாழ் வெய்த
    அகில உலகப் பொதுவாம் சமயம் கண்டோம்.
அறிவித்தோம் கர்மயோகம் என்னும் பேரால்;
    அக்கலையே மனித இன வாழ்வில் எங்கும்
அறிவுக்கு விளக்காகி அறம் மலர்த்தி
    அனைத்து மதங்களைத் தன்னுள் இணைத்துக் கொள்ளும்."

(ஞாக.பா.512)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 34. மன ஒருமைப்பாடு

## (ஜென்னும் வேதாத்திரியமும்)


ஒரு ஜென் துறவி அவரது சீடன் ஒருவன் தோட்டத்தை சுத்தம் செய்வதை பார்த்து கொண்டிருந்தார். அவன் அதிக நேரமாக ஒரே வேலையை செய்தும் சுத்தம் இல்லாமல் இருந்தது.

ஜென் மாஸ்டர் அவனை அருகில் அழைத்து ஒரு கதையை கூறினார்.

அது, "ஒரு முறை ஓர் சிறந்த ஓவியன் அவருடைய திறமையை முன்வைத்து ஒரு ஓவியத்தை வரைந்து, பின் அவருடைய சக தோழனிடம் "எப்படி இருக்கிறது" என்று கேட்டார்.

தோழனும் "இது நன்றாக இல்லை" என்று கூறினார்.

மீண்டும் மீண்டும் அந்த ஓவியர் வரைந்தவற்றை சரிசெய்ய, தோழனோ நன்றாக இல்லை என்று சொல்லி கொண்டு இருந்தார்.



அதனால் அந்த ஓவியர் தன் தோழனிடம், "நீ போய் எனக்கு கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா!" என்று தோழனை அனுப்பி விட்டு, பின்பு அவர் ஓவியத்தில் முழு கவனம் செலுத்தி ஓவியத்தை வரைந்தார்.

தண்ணீர் கொண்டு திரும்பிய தோழன், அந்த ஓவியத்தை கண்டு ஆச்சரியத்துடன் “படு சூப்பர்” என்று சொல்லி, அவரை பாராட்டினான்.

ஆகவே “எந்த ஒரு செயலையும் நாம் நம் முழு கவனத்துடன் செய்வதால் வெற்றி நிச்சயம். அதைவிட்டு அந்த செயலை பிறர் பார் கின்றனரே என்று ஒரு பயத்துடன் செய்தால், அது ஒரு முழுமையை தராது” என்று ஜென் மாஸ்டர் அந்த சீடனுக்கு இந்த கதையின் மூலம் உணர்த்தினார்.

“ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
அறிவினிலே நிலைத்து விடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்” (ஞாக.பா.1473)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1

# Youtube links

1. ஜென்னும் வேதாத்திரியமும் https://youtu.be/rMJ2PBFFuIg
2. புத்தத் தன்மையை முழுமையாக அடைய முடியவில்லையே?” https://youtu.be/r6ReGpDSI-4
3. “தேடுகின்ற பொருள் என்ன? ஏன்? https://youtu.be/x3kpgVL-7p0
4. அனைத்துக்கும் நாமே காரணம் https://youtu.be/5JVXZVP3eOE
5. உனக்கு என்ன தெரிகிறது? (வந்ததுதான் போகுமே அல்லாது) https://youtu.be/xx61NWg8CKU
6. ஞானம் யாரிடம் பெறுவது? https://youtu.be/_g2hBIYTuoU
7. பிறப்பு, இறப்பு என்பதன் அர்த்தம்! https://youtu.be/AGWNQF1_ZaY
8. வையமெல்லாம் வாழட்டும் https://youtu.be/1l4STLkJsT0

9. பழுக்கும் ஞானம் https://youtu.be/ES_F2-IHeXY

10.உயிராசையும் இல்லை! பண ஆசையும் இல்லை!
https://youtu.be/HNCS_rYEotA

11. விதி, சந்தர்ப்பம் மதி. https://youtu.be/nIbICPn9AtU

12. “பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு https://youtu.be/XUAQTtVIuxI

13. எதிர்பார்த்தல் ஏமாற்றமே https://youtu.be/xTVtEnhRS8M

14. நாளைக்காக கவலைப்படாதிருங்கள் https://youtu.be/iD9CWAG4Zig

15. முயற்சி அளவே ஞானத்தின் விளைவு! https://youtu.be/iF7QjCYCiOE

16. பயிற்சியும் முயற்சியும் https://youtu.be/7O9RLsL9Y24

17. குருவின் மேன்மை https://youtu.be/2f3MQrBZB_k

18. ஞானம் என்பது அறிந்து கொள்வது https://youtu.be/fTxJQYED11M

19. வீடுபேறு எப்போது எய்தலாம்? https://youtu.be/voJzWeydZ40

20. மனம் என்பது பெருங்கடல் https://youtu.be/76X6tkLPfCM

21. மன ஒருமையும் சந்தோஷமும் https://youtu.be/Pncq33OXRzI

22. அகத்தவமும் அற வாழ்வாகும் https://youtu.be/Gi0v4t53-Qk

23. சிந்தை அடங்கிடும் சீவனே சிவனாகும் https://youtu.be/ouxybIQRbNI

24. அறிவாளி யார்? https://youtu.be/-U8VNQV4Pow

25. மனிதனுக்குப் பிறப்புத் தொடர் https://youtu.be/7J2WYx3XEQ

26. ஞானம் தேடும் பக்தர்கள் https://youtu.be/aUQ9kheBOtk

27. வழியும் கோப்பை https://youtu.be/P-mk3anuR5E

28. போரை நிறுத்திய புத்தர் https://youtu.be/t6mGjuyssr8

29. தெளிவு குருவார்த்தைக் கேட்டல் https://youtu.be/LOIXnjLLyAA

30. பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகிவிடும்
https://youtu.be/TvZ6SEI6WEE

31. சுய அறிவால் உனையறியும் சாவி எது?
https://youtu.be/xpVKGk6jIIg

32. இயற்கை என்ற போரட்டக்காரன் https://youtu.be/NGMCyY0wFEo

33 .கர்மயோகமா? தியானமா? https://youtu.be/TwIhTkve0ws

34. புலன்கடந்த செயல்முடிவே https://youtu.be/VAWGoRrCVkQ

35. ஞானத்தை தேடி https://youtu.be/P-iIm0PbDkc

36. உளமார்ந்த மன்னிப்பு https://youtu.be/VMOulJ9sksw

37. செயலுக்கு விளைவு உண்டு? https://youtu.be/VMOulJ9sksw

38. பிறந்தவர்கள் அனைவருமே இறப்பார் https://youtu.be/FeuTsz_UHVk

39. எதற்கும் கவலை வேண்டாம் https://youtu.be/bKLEyjZ9Dhw

40 .ஞானத்தின் நிலைகள் https://youtu.be/dH_g9xppc2k

41. எண்ணத்தின் சிறப்பு https://youtu.be/gmwyAl4hQzM
42. முழு விழிப்புணர்ச்சி! https://youtu.be/iF63ygxsM0w
43. நீ நான் இல்லையே! https://youtu.be/Bl1nKYoYalQ
44. மனம் ஒரு பொக்கிஷம் https://youtu.be/xDVSkB0MZFQ
45. நிகழ்காலத்தில் வாழ வேண்டுமென்றால் https://youtu.be/qTUG2U1LE38
46. நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும் https://youtu.be/3nUvTOaY6sU
47.மௌனம் எனும் ஞானவரம்பு https://youtu.be/FNblbWBQB0U
48.கருதவமே போதும் https://youtu.be/Be67Qv6wIP4
49. சொர்க்கமா? நரகமா? https://youtu.be/ZCsGijQO5iI
50. சித்தம் என்னும் பெருநிதி https://youtu.be/5vAXpI2RKF0

## துணைநின்ற நூல்கள்


1. ஜென் கதைகள், இணையதளம்
2. ஞானக்களஞ்சியம் பாகம் 1 & 2, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. உலக சமாதானம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4. மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, பாகம்1.2.3. விஜயா பதிப்பகம், கோவை.
6. ஞானம் தரும் ஜென் கதைகள், அம்பிகா சிவம், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
7. ஜென் கதைகள், ஏ.சோதி, நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி
8. ஜென் கதைகள், உதயதீபன், மீனாட்சி பதிப்பகம், சென்னை
9. உலக சமாதானம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
10. Zen Stick – karn Rahul - Kindly Store
11. Tanya"s Collection Of Zen Stories – Schmid Tanya


# ஆசிரியரின் பிற நூல்கள்

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?

9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்

15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஜன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து

15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு

7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்

2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

1. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## vethathiri am banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 106 தலைப்புகளில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1

5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்

40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்கோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2

75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
108.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து

109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்